உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 57 தை 09ஆம் நாள் திங்கட்கிழமை 22 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# தனிமையில் வசித்துவந்த மூதாட்டி தலையில் அடிகாயங்களுடன் மீட்பு

## நகைக்காகக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 22

வீட்டில் தனியாக இருந்த 72 வயது மூதாட்டி அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் அணிந்திருந்த நகைகள் காணாமற் போயுள்ளன.

ஆனைக்கோட்டை பொன்னையா வீதியைச் சேர்ந்த ஜெகநாதன் சத்தியபாமா (வயது-72) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நகைகளுக்காக மூதாட்டி அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம்நேற்று இரவு7மணியளவில்நடந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மூதாட்டி வீட்டில் தனித்து வசித்துள்ளார். சக்கர நாற்காலி மூலமும், ஊன்றுகோலின் உதவியுடனும் நடப்பவர். இவரது பெறாமகன் கிளிநொச்சியில் வசிக்கினாறர். வழமை » 04

# சுயேச்சைக் குழுக்களால் கட்சிகளுக்குப் பயப் பீதி

## நெடுந்தீவில் போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்கியுள்ள சுயேச்சைக் குழுக்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சர் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்கு நெடுந்தீவில் களமிறங்கியுள்ள சுயேச்சைக் குழுத்தலைவர் க.கேதீஸ்வரநாதன் கண்டனம் தெரிவித்துள்ளார். விஜயகலா மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று ஏற்பாடு » 04

see more news in newuthayan.com

# மைத்திரியிடம் விரைவில் மதுவரித் திணைக்களம்

கொழும்பு, ஜன. 22

நிதி அமைச்சின் கீழுள்ள மதுவரித் திணைக்களத்தையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்த பொருளாதாரம் தொடர்பான பொறுப்பை இந்த ஆண்டுமுதல் கையேற்கவுள் » 04

# அமைச்சுப் பதவியை துறந்தார் சாமர சம்பத்

கொழும்பு, ஜன. 22

ஊவா மாகாண முதலமைச்சரை பதவியிலிருந்து நீக்குமாறு அரச தலைவர் பணித்துள்ள நிலையில், முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, மாகாண கல்வி அமைச்சர் பதவியிலிருந்து தாமாகவே நேற்று விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபரை முழந்தாளிடச்செய்தார் என்று கூறப்படும் குற்றச்சாட்டால் ஊவா முதல்வருக்கு எதிராக எதிர்ப்புகள் வலுக்கின்றன. உடனடியாக அவர் கைதுசெய்யப்படவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. முதல்வர் பதவியையும் துறக்கவேண்டும் என அழுத்தமும் கொடுத்துள்ளது.

ஊவா முதல்வரின் இந்த அராஜகச் செயற்பாட்டுக்கு சிவில் அமைப்புகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன. முதல்வர் பதவியிலிருந்து அவரை உடனடியாகத் தூக்கவேண்டும் என்று அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளன. கல்வி அமைச்சை ஆளுநரின்கீழ் கொண்டுவருவதற்கு அரச தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார். இந்தப் பின்னணியில் கல்வி அமைச்சுப் பதவியிலி » 04



# தேநீரைக் கொடுத்து ஏமாற்றியவரே மகிந்த

## மனோ காட்டம்

கொழும்பு, ஜன. 22

"மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் தீர்வுப் பேச்சு நடைபெற்றபோது அங்கு சென்ற தமிழ்த் தலைவர்கள் வெறுமனே தேநீர் மட்டும் அருந்திவிட்டுத் திரும்பிவந்த ஏராளமான சந்தர்ப்பங்கள் உள்ளன. அதற்கு நான் நேரடி சாட்சி. இதயசுத்தியுடனான எந்த முயற்சியையும் தமிழர் பிரச்சினையில் செய்யாமல் இருந்துவிட்டு இப்போது ஒன்றுமே தெரியாதது போல மகிந்த ராஜபக்ச சொல்வது நகைப்புக்குரியதாக இருக்கிறது. பழையவற்றை அவர் மறந்தாலும் நாங்கள் மறக்க » 04

## கதிர்காமம் துப்பாக்கிச் சூடு:

# விசாரணை நடத்துவதற்கு இரகசியப் பொலிஸ் குழு

கொழும்பு, ஜன.22

கதிர்காமத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த இரகசிய பொலிஸ் குழுவொன்று அங்கு சென்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் கீழ் நேற்று அந்தக் குழு புறப்பட்டுச் சென்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்றவர் மீதே சூடு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதி மக்கள் இந்தச் சம்பவத்தை அடுத்து பொலிஸாருக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அங்கு பதற்ற » 04

# தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

## லீசிங்கே காரணம் என உறவினர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.22

மானிப்பாய் பகுதியில் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். கடன் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்த அவர் அதனால் ஏற்பட்ட மன அழுத்தத்தால் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

திருகோணமலையைச் சேர்ந்த நாகராசா உதயகுமார் (வயது-43) என்பவரே உயிரிழந்தார். » 04

# கொழும்பு அமெரிக்க மையத்துக்கு பூட்டு

கொழும்பு, ஜன. 22

கொழும்பிலுள்ள அமெரிக்க மையம் மறு அறிவித்தல் வரும்வரையில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

ஐக்கிய அமெரிக்காவின் புதிய வரவு செலவுத் திட்டம் செனட் சபையில் நிறைவேற்றப்படாமை காரணமாக பல அரச நிறுவனங்கள் மூடப்படும் நிலை உருவாகியுள்ளது. அதனால் இலங்கைக்கான அமெரிக்கக் காரியாலயமும் மூடப்பட்டுள்ளது » 04

# மணிவண்ணனிடம் பொலிஸ் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஜன. 22

தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ்ப்பாண மாநகர சபை வேட்பாளர் வி.மணிவண்ணன் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று அழைக்கப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற பேரவையின் தேர்தல் » 04

# மக்கள் பணத்தைத் திருடுவதே அபிவிருத்திக்குப் பெரும் தடை

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

எமது நாட்டில் அரசியல் செய்ய வருகின்றவர்களில் நூற்றுக்கு ஐம்பது சதவீதமானவர்கள் மக்களின் பணத்தை திருடுகின்றனர். இதுவே எமது நாட்டின் அபிவிருத்திக்கு பிரதான தடையாகும்.

இவ்வாறு அரச தலை » 04

# தமிழரின் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம்

## வடக்கு முதல்வர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 22

சிங்களவர்கள் ஆசை காட்டியோ அல்லது பலவந்தத்தின்பேரிலோ அரசால் அல்லது சிங்கள அரசியல்வாதிகளால் கொண்டுவரப்பட்டு தமிழ் மக்கள் காலாதிகாலமாக வாழ்ந்த இடங்களில் திட்டமிட்டுக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அரச அனுசரணையுடன் படையினர் பாதுகாப்புடன் வாழ்கின்றனர். அவர்கள் திட்டமிட்டு தமிழர் தாயகத்தைத் தம்வசமாக்க பலவந்தமாகக் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் » 04



# உதயனின் பொங்கல் விழா - 2018




உதயன் பொங்கல் விழா உதயன் பணிமனையில் நேற்றுக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.













# உதயனின் பொங்கல் விழா - 2018
















## பிணை முறி மோசடி

# அடுத்து கட்டம் தொடர்பில் ஆராய கூடுகின்றனர் கட்சித் தலைவர்கள்

சபாநாயகர் கரு ஜயசூரியவிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகள் குறித்து அடுத்தகட்டமாக எவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது என்பது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கான அரசியல் கட்சித்தலைவர்களின் கூட்டம் இன்று காலை நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத்தில் உள்ள சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சித்தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறிகள் தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் ஆங்கில மொழியில் உள்ள 26 பிரதிகள் சபாநாயகரிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளமையால் கட்சித்தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதி வீதம் அவை கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் 34தொகுதிகள் அடங்கிய விசாரணை அறிக்கையின் ஒருபிரதியே சபாநாயகருக்கு கிடைத்துள்ளமையால் அதன் பிரதிகள் மற்றும் மொழி பெயர்ப்புக்களைப் பெறுவதில் தாமதங்கள் தொடர்வதால் அந்த அறிக்கையின் பிரதிகள் கட்சித் தலைவர்களிடத்தில் கையளிக்கப்படமாட்டாது. ஆனால் நாளை செவ்வாய்க்கிழமை குறித்த இரண்டு விசாரணை அறிக்கைகளும் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறிகள் கொடுக்கல் வாங்கல்கள் மோசடி சம்பந்தமான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மற்றும் இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பான அரசதலைவர் ஆணைக்குழுவின் 34தொகுதிகள் அடங்கிய விசாரணை அறிக்கை ஆகியன கடந்த புதன்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரியவிடத்தில் கையளிக்கப்பட்டிருந்தன.

எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் சபை முதல்வர் ஆகியோருக்கு அவ்வறிக்கைகள் குறித்து அறிவித்ததோடு அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக கட்சித்தலைவர்கள் கூட்டத்துக்கான அழைப்பையும் விடுத்திருந்தார். அதற்கமைவாகவே இன்றையதினம் கட்சித்தலைவர்கள் கூட்டம் நடைபெறுகின்றது.

இந்த அறிக்கைகள் தொடர்பில் அடுத்த கட்டமாக எவ்விதமான நடவடிக்கைகளை எடுப்பது, எப்போது விவாதம்நடத்துவது என்பது தொடர்பில் கலந்துரையாடிப்பட்டு தீர்மானிக்கப்படவுள்ளது என்று அறியமுடிகின்றது. (ந-4,31)

## தனிமையில்...

யாக பெறாமகன் வந்து பார்வையிட்டுச் செல்வார். மூதாட்டிக்கு உணவு வழங்க வேறு நபர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர். மூதாட்டிக்கு பாதுகாப்பாக அவரது மைத்துனர் ஒருவர் வழமையாக இரவில் மூதாட்டியுடன் தங்குவார்.

இரவு பாதுகாப்புக்குத் தங்குபவர் நேற்று இரவு 7.30 மணியளவில் அந்த வயோதிபர் வீட்டிக்கு வந்த போதே வீட்டின் கதவுகள் திறந்திருந்தன. ஒளி இன்றி வீடு இருட்டாக இருந்தது. மின் ஆழியைப் போடச் சென்ற போது, ரிப் சுவிட்ச் விழுத்தப்பட்ட நிலையில் இருந்தது. மூதாட்டி தலையில் காயங்களுடன் சடலமாக காணப்பட்டார்.

இது தொடர்பில் அவர் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணை நடத்தினர். மூதாட்டி காதில் அணிந்திருந்த தோடு மற்றும் கையில் அணிந்திருந்த மோதிரம் ஆகியவற்றைக் காணவில்லை என்று பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. மூதாட்டியின் நகைகள் காணாமல் போயுள்ளமையால் நகைகளுக்காக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றார்கள். (ந-4,106)

## விசாரணை...

நிலமை ஏற்பட்டது. கதிர்காமம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக எதிர்ப்பில் ஈடுபட்டவர்களைக் கலைக்க கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட 63 பேர் கைது செய்யப்பட்டனர்.

அந்தப் பகுதியில் தற்போது பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்பு வழங்குகின்றனர். துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்று கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ந)

## சுயேச்சை...

செய்திருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நான் நெடுந்தீவு பிரதேசத்தை சேர்ந்தவன். எமது பிரதேசம் 30 ஆண்டுகளுக்கு மேலாக எந்தவித அபிவிருத்தியும் இல்லாது வறுமையிலேயே காணப்படுகிறது.

அரசியல் கட்சிகள் மீது பொதுமக்கள் விரக்தி அடைந்துள்ளனர். சுயேச்சைக்குழுக்களைப் பார்த்து சில அரசியல் கட்சிகளுக்குப் பயப்பீதி ஏற்பட்டுள்ளது. அந்தப் பயத்திலேயே சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா சுயேச்சைக் குழுக்களை மக்கள் பொருட்படுத்தாதீர்கள் எனக் கூறியுள்ளார். இந்தக் கருத்து கண்டிக்கத்தக்கது. இவ்வாறு கூறியமைக்காக அவர் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும். தற்போதைய தேர்தலில் களமிறங்கியுள்ள சுயேச்சைக் குழுக்களைப் பார்த்து அரசியல்வாதிகள் மிரண்டு போயுள்ளனர். அதனாலேயே இவ்வாறான கருத்துகளை மக்கள் மத்தியில் கூறிவருகின்றனர்."-என்றார். (ந-4,8)

## மைத்திரியிடம்...

ளேன் என்று ஏற்கனவே அரச தலைவர் அறிவித்துள்ள நிலையில் நிதி அமைச்சிலும் மாற்றத்தை அரச தலைவர் ஏற்படுத்தவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் அமைச்சரவை மாற்றமொன்று ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், நிதி மற்றும் பொருளாதாரம்சார் அமைச்சுகளை அரசதலைவர் பொறுப்பேற்கவுள்ளார் என்று நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்துக்கு இடமளிக்கப்பட்டிருந்தபோதும் இந்த வருடம் தொடக்கம் அந்தப் பொறுப்பைக் கையேற்கவுள்ளேன் என்று அரச தலைவர் கூறியிருந்தார்.

கருத்துக் கணிப்புகளின்படி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி மூன்றாமிடத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படும் நிலையில், வாக்கு வங்கிகளுக்காக பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது. (ந-4)

## தவறான...

திருகோணமலையில் வசிக்கும் அவர் கடன் அடிப்படையில் (லீசிங்) வாகனம் கொள்வனவு செய்திருந்தார். அதற்கான மாதக் கட்டடங்களைச் செலுத்திவந்த அவர் கடந்த 3 மாதங்களாக அதைச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அச்சமடைந்தவர் சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று தங்கியுள்ளார். தான் தங்கியிருந்த வீட்டின் பின்புறம் இருந்த மரத்தில் தவறான முடிவெடுத்துச் சுருக்கிட்டு உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

உறவினர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ந-4,8)

## தமிழரின்...

தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் வாராந்தம் வெளியிடும் கேள்வி பதில் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகள், ஏன் நீங்களும் கூட, வடக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் குடிகொள்ளப் பார்க்கின்றார்கள், எமது பாரம்பரியம் அழியப் போகின்றது என்றெல்லாம் குரல் எழுப்புகின்றீர்கள். தமிழராகிய நாம் பெருவாரியாக கொழும்பில் குடியிருக்கின்றோமே அது சிங்களப் பாரம்பரியத்தை அழிப்பதாக அர்த்தம் கொள்ளமுடியாதா? நீங்கள் உங்கள் கூக்குரல்களால் கொழும்பில் வசிக்கும் எம்மையெல்லாம் அவதிக்குள்ளாக்குகின்றீர்கள் என்பதை ஏன் புரிந்துகொள்ளமாட்டீர்கள்? என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

"குடியமர்வு எமது பாரம்பரியத்தை அழிக்க வென்று திட்டமிட்டு இயற்றப்படுகின்ற செயற்பாடு. எம்மை நாட்டின் பல பாகங்களிலுமிருந்து விரட்டி அடித்துவிட்டு காலாதிகாலமாக நாம் வாழ்ந்துவரும் இடங்களையும் கையகப்படுத்த அரசால் நிகழ்த்தப்பட்டுவரும் நடவடிக்கை. எம்முள் 10 இலட்சத்துக்கு மேற்பட்டோரை நாட்டிலிருந்து விரட்டியாகிவிட்டது. தொடர்ந்து எமது பூர்வீக நிலங்கள் என்று இது வரை அடையாளப்படுத்தப்பட்டு வந்த எமது நிலங்களை ஆக்கிரமிக்கும் செயலே இந்த அரசின் குடியமர்வு. இதை எம் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்." -என்றார். (ந-4)

## மக்கள்...

வர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவடிவேம்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் அரசியல் செய்ய வருகின்றவர்களில் நூற்றுக்கு ஐம்பது சதவீதமானவர்கள் மக்களின் பணத்தை களவாடுகின்றார்கள். சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஊடாக நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மக்கள் பணத்தை களவாடவோ சூறையாடவோ ஒரு போதும் இடமளிக்க மாட்டேன்.

ஊழல் மோசடிகளைக் கண்டறிய ஆணைக்குழுக்களை அமைத்தோம். இந்த ஆணைக்குழு அறிக்கையின் பிரகாரம் குற்றவாளிகள் என கூறப்பட்டிருக்கும் அனைவருக்கும் எதிராகவும் நாங்கள் வழக்குத் தாக்கல் செய்வோம். எந்த கட்சியைச் சார்ந்தவர்களானாலும் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கமாட்டோம். நாட்டில் சுத்தமான அரசியல் கலாசாரத்தை உருவாக்க மக்களுக்கு அழைப்புவிடுக்கிறேன்.

மக்கள் பணத்தை கொள்ளையிட்டு அபிவிருத்தி என்ற பெயரில் மக்களின் பணத்தை திருடிய அரசியல் கலாசாரத்தால் இன்று வேறு எந்தவொரு கட்சித் தலைவருக்கும் அரசியல் மேடைக்கு வந்து தாம் தூய்மையானவர்கள் என்றோ மக்கள் சார்பானவர்களென்றோ கூற முடியாதுள்ளது.

ஊழல் மோசடிகள், கள்வர்கள் இல்லாத சிறிய மனிதர்களின் கட்சியான சிறி லங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்தி மக்கள் சார்பு பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்- என்றார். (ந)

## மணிவண்ணனிடம்...

அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் தேர்தல் ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரி ஒருவர் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டமைக்காகவே அவர் வாக்குமூலம் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியப் பேரவையின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வேட்பாளர் மணிவண்ணன் தேர்தல் ஆணைக்குழுவில் முக்கிய பதவி வகிக்கும் ரட்ணஜீவன் கூல் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-4,8)

## தேநீரை...

வில்லை. இவ்வாறு நேற்று "உதயனிடம் தெரிவித்தார் சகவாழ்வு, நல்லிணக்க அமைச்சரும், ஒருமித்த தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவருமான மனோ கணேசன்.

தனது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற தீர்வுப் பேச்சுகளின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் போதிய ஒத்துழைப்பைத் தரவில்லை என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். அது தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் மனோஇவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்தாவது

சம்பந்தன் கடந்த ஆட்சியில் தீர்வுப் பேச்சுக்கு ஒத்துழைக்கவில்லையென மகிந்த கூறுவது பச்சைப் பொய். முழுப் பூசணிக்காயையும் சோற்றில் மறைத்துவிடக்கூடாது. அந்தக் காலங்களில் நடைபெற்ற தீர்வுப் பேச்சுகளில் நாங்களும் பங்குபற்றியிருந்தோம். பேச்சுக்குச் சென்ற பல சந்தர்ப்பங்களில் அங்கு வந்த மகிந்த அரசின் அமைச்சர்கள் ஏதோ ஒப்புக்கு சப்பாணி கட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆக்கபூர்வமாக எதையுமே பேசவில்லை. பேச்சுகளுக்குத் தாமதமாக வருகை தருவது, பேச்சுகள் முடியும் முன்னரே எழுந்து செல்வது போன்ற விருப்பமில்லாத சில செயற்பாடுகளையும் அவர்கள் செய்தனர்.

அப்படி பேச்சு நடந்த காலத்தில் தேநீரை மட்டும் குடித்துவிட்டு நாங்கள் திரும்பிய நாள்களும் உண்டு. தமிழ்த் தலைவர்கள் மக்கள் பிரச்சினைகளைப் பேசச் சென்றபோதெல்லாம் அவர்களுக்குத் தேநீரை மட்டுமே வழங்கி சமாளிக்கும் சிங்களத் தலைவர்களின் வரலாறு எமக்குப் புதிதல்ல. அவற்றை நாங்கள் நன்கு அறிந்துவைத்திருக்கிறோம்.

இவற்றை மறந்துவிட்டு திடீரென தூக்கத்தி லிருந்து எழும்பியவர்போல் இப்போது மகிந்த ராஜபக்ச பேசுகிறார். தமிழருக்கான தீர்வு முயற்சியில் சம்பந்தன் முழுமையாக ஒத்துழைப்பை வழங்கினார். நீங்கள்தான் இதயசுத்தியுடன் ஒத்துழைக்கவில்லையென்பதை நான் மகிந்தவுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்" - என்றார். (ந-4)

## கொழும்பு...

எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பென்டகன் மற்றும் ஏனைய சில சமஷ்டி முகவர் அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு செனெட்டின் குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் அங்கீகாரம் அளிக்க மறுத்து வருகின்றனர். அதனால் அமெரிக்காவின் பெரும்பாலான அரச பணியகங்கள் செயலிழக்கவுள்ளன. முக்கியமாக நுழைவிசைவு வழங்கும் பணிகளில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், திட்டமிட்டபடி கடவுச்சீட்டு மற்றும் நுழைவிசைவு சேவைகள் தொடரும் என்றும், அமெரிக்க மையம் மறு அறிவித்தல் வரும்வரை மூடப்பட்டிருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ந-4)

## அமைச்சு...

ருந்து சாமர சம்பத் தஸநாயக்க விலகியுள்ளார். இது ஓர் அரசியல் நாடகம் என்று விமர்சனமும் எழுந்துள்ளது.

"தேர்தல் காலம் என்பதாலேயே கல்வி அமைச்சுப் பதவியிலிருந்தாவது அவரைத் தூக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தீர்ப்பு அல்ல. விசாரணைகள் முடிவடையும்வரை முதல்வர் பதவியிலிருந்து அவர் விலகியிருக்கவேண்டும். முதல்வர் பதவியை அவர் வகிக்கும்போது எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும். அரச தலைவரின் நடவடிக்கைகூட அரசியல் சமாளிப்புச் செயல். கல்விச் செயலாளர் மீதும் நடவடிக்கை அவசியம்.

ஆசிரியர் ஒருவரை மண்டியிடவைத்த வடமேல் மாகாண சபை உறுப்பினரை பொலிஸார் கைதுசெய்து சிறையிலடைத்தனர். தேர்தலில் போட்டியிட அவருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இதே பாணியில் ஊவா முதல்வரும் கைதுசெய்யப்படவேண்டும். இதை வலியுறுத்தி 23ஆம் திகதி கொழும்பில் போராட்டம் நடத்தப்படும் என்று ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதிபரொருவர் துன்புறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் மற்றும் பொலிஸில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கமைய பாரபட்சமின்றி விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு அரச தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

விசாரணைகள் நிறைவுறும்வரை ஊவா மாகாண கல்வி நடவடிக்கைகளை ஊவா மாகாண ஆளுநரின்கீழ் கொண்டுவருமாறு அரச தலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார். விசாரணையின் பின்னர் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் பொலிஸ்மா அதிபருக்கு அரச தலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, பாடசாலை அதிபரை ஊவா மாகாண முதலமைச்சர் மண்டியிட வைத்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். நேற்று முற்பகல் 11 மணியளவில் அவர் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

(ந-4)





## விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி.ஜன.21
சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் 2018ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு மகளிர் தினத்தையொட்டிய சங்க அங்கத்தவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்துக்கு முன்பாக உள்ள மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

போட்டிகள் அனைத்தும் 35 வயதுக்கு மேல், 35 வயதுக்கு கீழ் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன.

நேற்றுமுன்தினம் கிடுகு பின்னுதல், போத்தலில் நீர் நிரப்புதல், தேங்காய் துருவுதல், யானை நடை, தடை தாண்டல், வேகநடை, பலூன் ஊதி உடைத்தல், கடிகார ஓட்டம் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன என சங்கத் தலைவர் ம.கீர்த்திநாதன் தெரிவித்தார். (எ-9)

## வனப் பகுதி ஒன்றில் கைக் குண்டு மீட்பு

நுவரெலியா.ஜன.22
கிராதுருகோட்டை வெலிதொட பிரதேச வனப் பகுதி ஒன்றில் கை குண்டு ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கைக்குண்டை மீட்டனர்.

கைக் குண்டு வெடிகுண்டு அகற்றும் பிரிவிடம் கையளிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



## கால்கோள் விழா

தென்மராட்சி.ஜன.22
மட்டுவில் வடக்கு சந்திரமௌலீசர் வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க.எழிலழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம் தம்பதியினர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் புதிதாக இணைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் முதன்மை விருந்தினர்களால் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# திருட முயன்ற குற்றச்சாட்டில் நையப்புடைப்பு

### பொலிஸார் வராததால் மருத்துவமனையில் சேர்ப்பு

சாவகச்சேரி, ஜன. 22
ஆள்களில்லாத வீட்டினுள் புகுந்து திருட முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் பிரதச மக்களால் நையப்புடைக்கப்பட்டார். படுகாயமடைந்த அந்தச் சந்தேகநபரைச் பின்னர் மருத்துவமனையில் சேர்த்தனர்.

இந்தச் சம்பவம் சம்பவம் நேற்று பகல் மீசாலை அல்லாரை தெற்கில் இடம்பெற்றது. வீட்டிலுள்ளோர் பொருள்கள் வாங்கக் கடைக்குச் சென்றிருந்தபோது வீட்டினுள் புகுந்த நபர் அங்கிருந்து பொருள்களைத் திருடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது வீட்டுக்காரப் பெண் திருடனைக் கண்டதும் சத்தமிட்டுள்ளார். அயலவர்கள் அங்கு ஒன்றுகூடினர். திருடவந்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் சுமார் 33 வயதுடைய குறித்த நபரைசுற்றி வளைத்துப்பிரதேச மக்கள் நைய்யப்புடைத்தனர். பொலிஸாருக்குத் தகவல் வழங்கி ஒரு மணி நேரமாக் அங்கு வராததால் திருடன் சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னரைவிட தென்மராட்சியின் பல பகுதிகளிலும் திருடர், கொள்ளையர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்பது அண்மைய நாள்களாக அவதானிக்க முடிகிறது. ஏனைய பிரதேசங்களிலிருந்து திருட்டு, கொள்ளைகளுக்குக்குறி வைக்கப்படும் இடமாகத் தற்புாது தென்மராட்சி மாறியுள்ளதாகவும் பிரதேசத்தைச் சேர்ந்த பலரும் கூறுகின்றனர். (4,9)

## ஆண்டு நிறைவு கொண்டாட்டமும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.21
வட இலங்கை மருந்தியலாளர் ஆண்டு நிறைவு கொண்டாட்டமும் மருத்துவக் கருத்தரங்கும் யாழ்ப்பாண கிறீன்கிறாஸ் ஹோட்டலில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜி.குணசீலன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மருந்தியலாளர்கள், மருந்தியலாளப் பயிலுநர்கள், மருந்தக உரிமையாளர்கள், மருந்தக உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-4)

## உபகரணங்கள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம்.ஜன.18
மூளாய் கூட்டுறவு மருத்துவமனைச் சங்கத்துக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப் பட்டன.

பிரான்சில் வசிக்கும் தில்லையம்பலம் ஜெகநாதன் தனது தாயாரின் நினைவாக பல லட்சம் ரூபா பெறுமதியான நவீன கட்டில்கள் மற்றும் சத்திர சிகிச்சை பிரிவுக்கான உபகரணங்களையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கிவைத்தார்.

நிகழ்வில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைப் பணிப்பாளர் சபையினர், பணியாளர்கள் மற்றும் காரை அபிவிருத்தி சபையின் உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்எனகூட்டுறவுநிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (எ-4)

## வயாவிளான் மத்திய கல்லூரியின் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.21
வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் வயவன் மலர் வெளியீடும் நிறுவுநர்கள் சிலைகள் திறப்பு நிகழ்வும் பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும்; சிறப்பு விருந்தினராக வலிகாமக் கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.காண்டீபனும் மதிப்புறு விருந்தினராக ஒட்டுசுட்டான் உதவிப்பிரதேச செயலர் ராஜமல்லிகை ஜெகநாதசர்மாவும் கலந்துகொண்டனர். நிகழ்வில் சி.கிருசாத், வி.கஜவதனி ஆகியோர் வயவன் நட்சத்திர விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (எ.21)

## அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டாரைத் தாக்கியது

சாவகச்சேரி.ஜன.20
வளவினுள் அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டினுள் இருந்த சகோதரர்களை மோசமாகத் தாக்கி விட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 16ஆம் திகதி இரவு சாவகச்சேரி கிழக்கில் இடம்பெற்றது. வழியில் வைத்து தாக்கப்படலாமென்ற அச்சத்தில் இரவு மருத்துவமனைக்கு கொண்டு வராமல் 17ஆம் திகதி சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் வசீதரன்(வயது 27) செல்வரத்தினம் கெங்காதரன் (வயது 31) ஆகியோரே தாக்குதலுக்கு உள்ளானவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-4-9)



## மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல்

கரணவாய்,ஜன.22
தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில்இந்த வருடத்துக்கான புதிய மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அண்மையில் இடம்பெற்றது.

தேர்தலில் 10 அமைச்சர்கள் அடங்கலாக 42 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 350 மாணவர்கள் வாக்களித்தனர். (எ-108)

## வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல்களை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம்,ஜன.21
மோட்டார் வாகனத் திணைக்களத்தால் கடந்த 18ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல்களை பிரதேச செயலகங்களில் பார்வையிடலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. அத்தோடு மாவட்ட செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்எனபிரதிஆணையாளர் வை.பரந்தாமன் தெரிவித்துள்ளார். (எ-4)

## இல்ல மெய்வன்மை போட்டி

தென்மராட்சி.ஜன.21
கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலய மைதானத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும்நிகழ்வில்முதன்மை விருந்தின ராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசனும் சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை பிரதி முகாமையாளர் க.சிறிதரனும் மதிப்புறு விருந்தினராகவித்தியாலயத்தின்பழையமாணவி ம.ராதிகாவும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# மின்கலத் தட்டுக்கள் மூலம் மின்சாரம்

சாவகச்சேரி,ஜன.21
தென்மராட்சியில் நீர் வழங்கல் வடிகால்கள் அமைப்புச் சபையின் வேம்பிராய் குடிநீர் விநியோக அலுவலகத்தில் சூரிய மின் கலங்களுக்குரிய தட்டுக்கள் பொருத்தப் பட்டுள்ளன.

குடிநீர் விநியோ கத்துக்கென இரு குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள் ளன. மீசாலை புத்தூர்ச் சந்தி கனகன்புளியடிச் சந்தி வீதியில், வீதியின் இருபக்கங்களிலும் நீர் வழங்கலுக்கான குழாய்க் கிணறுகளும் அத்துடன் கூடிய அலுவலக மற்றும் பம்பி அறைகளும் அமைக்கப்பட் டுள்ளன.

இந்த அறைகளின் மேல் உள்ள சீமேந்து தளத்திலேயே 32 சூரிய மின்கலத்தட்டுக்கள் பொருத்தப் பட்டு மின்கலம் பெறப் பட்டுவருகிறது. தற்போது நீர்ப் பம்பிக்கு பெறப்படும் மின்கலம் சூரிய மின்கலத்திலிருந்து பெறப்படுவதாகவும் மேலதிகமாக கிடைக்கும் மின்சாரம் இலங்கை மின்சார சபையின் மின் வழங்கலுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் சூரிய மின் கலத்தை பெறக்கூடியதாகவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது. (எ-131)

# வாக்காளர் அட்டைகள் விநியோகம்

தென்மராட்சி,ஜன.22
நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள், சாவகச்சேரி தேர்தல்தொகுதிக்கு உட்பட்ட சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுக்கு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் அஞ்சல் அலுவலகங்களின் அலுவலர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தேர்தல்கள் திணைக்களத்தால் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி போன்ற அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாக்காளர் அட்டைகள் அஞ்சல் அலவலர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

அஞ்சல் அலுவலகங்களுக்கு வாக்காளர் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து இரவு பகலாக பொலிஸார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ.9)

## தென்மராட்சியில்
# டெங்கு குறைந்தது

தென்மராட்சி,ஜன.22
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருட ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருட ஜனவரி மாதம் டெங்குவால் தாக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளதென சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் ஜனவரி மாதம் 92பேர் டெங்குவால் பீடிக் கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இந்த வருடம் ஜனவரி 15ஆம் திகதி வரை 36 பேரே டெங் குவால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் சுகாதாரத் திணைக்களத்தினர் நடுவண் சுகாதாரத் திணைக்களம் மாகாண சுகாதாரத் திணைக்களம், தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவற்றின் பணிப்புரையின் பேரில் பல தடவைகள் டெங்குக் கட்டுப் பாட்டு நடவடிக்கைகள் கிராம அலுவலர் பிரிவுகளில் மேற் கொண்டனர் எனவும் இதனால் டெங்குவின் தாக்கம் குறைவடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் பிரதேசத்தில் 685 பேரே டெங்குவால் பீடிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-9)

# தென்மராட்சியில் தேர்தல் பரப்புரையில் வேட்பாளர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.22
தென்மராட்சி செயலகப் பிரிவில் உள்ள சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரி பிரதேசத்திற்குரிய உள்ளூராட்சி தேர்தலில் களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் கிராமம் கிராமமாக வீடுகளுக்கு சென்று வாக்குக்கேட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபையின் 28 உறுப் பினர் தெரிவுக்காக பலர் போட்டியிடுகின்றனர். அதே போன்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தெரிவுக்கும் பலர் பேரட்டியிடுகின்றனர்.

பொது இடங்களில் வேட்பாளர்களது விளம்பரங்கள் ஒட்டப் படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. (எ-131)



# குருதியமுக்க பரிசோதனை கருவிகள் வழங்கி வைப்பு

சாவகச்சேரி,ஜன.22
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மேலும் இரு குருதி அமுக்க பரிசோதனைக் கருவிகள் நலன்விரும்பியொருவரால் நேற்றுமுன்தினம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவமனையில் பரிசோதனைக் கருவிகள் பற்றாக்குறையால் நோயாளர்கள் சிகிச்சைப் பிரிவுகளில் நான்கு மருத்துவர்கள் மாறி மாறி ஒரு பரிசோதனைக் கருவியினைப் பயன்படுத்தி சிகிச்சையளிக்கின்றனர். இதனால் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மருத்துவமனையின் கோரிக்கையையடுத்து நலன்விரும்பியொருவர் பரிசோதனைக் கருவிகளை மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் சி. குமரவேளிடம் கையளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமத்தைச் சேர்ந்த இந்து மதகுரு ஒருவர் தனது செலவில் 4 பரிசோதனைக் கருவிகளை கடந்த மாதம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-9)





பொலிகை பாரதியின் வருடாந்த இல்ல விளையாட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வில் ஹெயஸ் வாகனத்தை தலை முடியிடினால் இழுத்து சாதனை படைத்தார் சி. பிரதீபன். பற்களால் உழவு இயந்திரத்தை இழுத்து சாதனை படைத்தார் எஸ்: ஞானச்சந்திரன். படி ரக வாகனத்தை உடம்பால் இழுத்து சாதனைபடைத்தார் 9 வயதுச் சிறுமியாகிய எஸ் ஜதுர்சிகா. (எ-108)

# கத்தரி பயிரிடல் ஆரம்பம்

சாவகச்சேரி,ஜன.21
யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவில் பகுதியில் கத்தரி பயிரிடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மழை ஓய்ந்ததை அடுத்து வயல் வெளிகளில் நெற்பயிர்கள் அழிவடைந்த வயல்களிலும் மேட்டு நிலத்திலும் விசவாயிகள் கத்தரியை பயிரிட்டுள்ளனர். அடுத்துவரும் இரண்டு மாதங்களில் மட்டுவில் கத்தரிக்காய் சந்தைக்கு வந்துவிடும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெருமளவு கத்தரி பயிரிடப்பட்டுள்ளது. அவை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் வயல் வெளி, மட்டுவில் சிவன் கோயில் வயல்வெளி பகுதிகளில் கூடுதலாக பயிரிடப்பட்டுள்ளன. மட்டுவில் பகுதியில் பெரியளவில் முட்டிக் கத்தரிக்காய் சில காலங்களுக்கு முன்னர் பயிரிடப்பட்டது. பின்னர் குறிப்பிட்ட கத்தரி இனம் இல்லாமல் அருகிவிட்டது. தற்போது விவசாயிகள் புதிய இனங் களை பயிரிட்டு வருகின்றனர். (எ-131)

# சுகாதார வசதியற்ற உணவகங்களுக்கு சீல்

யாழ்ப்பாணம்,ஜன.22
நாவாந்துறை பிரதேசத்தில் போதிய வசதிகள் அற்று காணப்பட்ட உணவகங்கள் சீல் வைத்து மூடப்பட்டுள்ளன. யாழ்.மாநகர சுகாதார பிரிவினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது ஐந்து உணவகங்கள் போதிய வசதிகள் அற்ற நிலையில் காணப்பட்டன.

அந்த உணவகங்களுக்கு எதிராக சுகாதார பிரிவினரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற கட்டளைக்கு அமைய ஐந்து உணவகங்களும் சீல் வைத்து மூடப்பட் டன. அதே சமயம் இந்தப் பகுதியில் நடமாடும் வடை வண்டில் ஒன்றும் போதிய சுகாதாரம் இன்றி காணப்பட் டதால் வண்டிலின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன் றில் வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டது. நடமாடும் வண்டிலும் நீதி மன்றால் சீல் வைத்து மூடப்பட்டது. (எ-17)

# புலமைப் பரிசில் பெறுபேறு

யாழ்ப்பாணம்,ஜன.22
யாழ்ப்பாணம் செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலையின் 2017ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரிட்சை சித்தியடைந்த மாணவர்கள்

லோகேஸ்வரன் வருண்-164 புள்ளிகள், சந்திரசேகரம் கோபிராம்-156 புள்ளிகள்

மீளாய்வு பெறுபேற்றில் சித்தியடைந்த மாணவன் சதீஸ்வரன் சுடர்நிலவன்-155 புள்ளிகள்.

# மணவாளக் கோலம்

சாவகச்சேரி,ஜன.22
மீசாலை மேற்கு அருள்மிகு நரசிங்க வைரவ சமேத காளி தேவஸ்தான மணவாளக்கோல திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. ஆலய குருக்கள் தலைமையில் காலை சிறபபு;ப் பூசைகளுடன் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. பூசைகளைத் தொடர்ந்து வைரவ சமேத காளி திருவீதி உலா இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (எ-131)

**************

யாழ்ப்பாணம்,ஜன.22
நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த ஆலய மணவாளக் கோலத் திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறும். அன்றைய தினம் காலை 10 மணிக்கு சங்காபிஷேக சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்று மணவாளக்கோள திருவிழா இடம்பெறும். தொடர்ந்து நண்பகல் அன்னதானம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-17)

# மக்களுக்கு கூற வேண்டியதை சரியாகவே கூறிவருகின்றோம்

*உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.22

மக்களுக்கு நாம் என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சரியாகத் தான் சொல்லிக் கொண்டு இருக்கின்றோம் இவ்வாறு தெரிவித்தார் உதயன் குழுமத்தின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன்.



உதயனின் பொங்கல் விழா நேற்று உதயன் பணிமனையில் கோலாகலமாக நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இங்கே வந்த பெரியார்கள் தங்களது ஆசியுரைகளுடன் அறிவுரைகளையும் சேர்த்து நிகழ்வுக்கு ஏற்றாற் போல் வழங்கிச் சென்றுள்ளனர். இந்த நிகழ்வையும் சிறப்பான குழுச் செயற்பாட்டின் மூலம் எமது பணியாளர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். எமது வளர்ச்சியின் போது சந்தித்தவற்றை நான் கூற வேண்டும். எமது பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது. இந்த கட்டட தொகுதியில் 186 ரவைகள் மீட்கப்பட்டன. நிறைய பாதிப்புக்கள் ஏற்பட்டன. ஆனால் அடுத்த காலையே எமது பத்திரிகை ஆசிரியரின் முயற்சியால் வெளிவந்தது.

தாக்குதல் தொடர்பாக எந்தவிதமான வழக்குகளோ விசாரணைகளோ உரியவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. இப்போது சுதந்திரம்.காணப்படுகின்றது என்று கூறப்பட்டாலும் நெருக்கடிகளும் காணப்படுகின்றன. ஊடகப் பயணத்தில் பலர் எம்முடன் இணைந்துள்ளனர். இப்போதும் ஊடகப் போராளிகள் எம்முடன் இருக்கின்றனர். இங்கு வளர்ந்தவர்கள் வெளியே சென்று பத்திரிகையைப் பற்றித் தாழ்த்திப் பேசினால் அது அவர்கள் தம்மையே ஏளனம் செய்வதாக அமையும்.

மக்களுக்கு நாம் என்ன சொல்ல வேண்டுமோ அதை சரியாகத் தான் சொல்லிக் கொண்டு இருக்கின்றோம். இன்னமும் கொள்கை மாறவில்லை. தமிழ் இனம் எதை நோக்கிப் பயணிக்கின்றதோ அதை நோக்கியே பயணிப்போம். யாரின் விமர்சனங்களுக்கும் நாம் அடிபணிய மாட்டோம். மக்களுக்காக இருப்போம் - என்றார். (ஞ-ரி)


# தோட்டப்பகுதியில் மீட்கப்பட்ட கடவுளின் பாதத்தால் பரபரப்பு

நுவரெலியா,ஜன.22

மஸ்கெலியா, வட்மோர் தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் 'கடவுளின்' வலது கால் பாதம் ஒன்று மீட்கப்பட்டது. இதனால் அந்தப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மனிதர்களுடைய பாதச் சுவட்டை விடப் பெரிதாகக் காணப்படும் இந்தப் பாதச் சுவட்டை முதலில் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்த அந்தப்பகுதிவாசிகள் உடனடியாக அது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் அளித்தனர்.

தகவல் அறிந்த மக்கள், அது கடவுளின் பாதச் சுவடாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணியதுடன், அதற்கு மஞ்சள், குங்குமம், தேசிக்காய் வைத்து பூஜையும் செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.



சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், பாதச் சுவடு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞ-ரி5)

# ஐ.சு.முவின் மக்கள் சந்திப்பு

மட்டக்களப்பு.ஜன.22

உள்ளூராட்சித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேச்சைக்குழு போட்டியிடும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களின் மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் துறைநீலாவணை பிரதேசத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக் கட்சியின் தலைவரும் முன்னாள் மீள் குடியேற்ற பிரதி அமைச்சருமான வி.முரளிதரன் இந்தத் தேர்தல் தங்களுக்கு எதிர்காலத்தில் கிழக்கில் தமிழன் ஒருவர் முதலமைச்சர் ஆக்குவதற்கான வாய்ப்பை சிறந்த முறையில் அளிக்கின்ற வகையில் அமைந்துள்ளது எனத் தெரிவித்ததுடன் அரசியல் நடவடிக்கை தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கினார். (ஞ.ரி4)

## பெண்களுக்கு எதிரான வன்முறை


# ஊவா முதலமைச்சரை கைது செய்யக் கோரிக்கை

கொழும்பு.ஜன.22

பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றச்சாட்டின் கீழ் ஊவா மாகாண முதலமைச்சர் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என அதிபர்கள் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அதிகாரத்துக்குக் கட்டுப்படாத பதுளை பாடசாலை அதிபரை மண்டியிட வைத்தமை தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.





அவர் தெரிவித்ததாவது.

“அதிபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய மாகாண கல்விச் செயலாளரின் பொறுப்பற்ற செயற்பாடு தொடர்பாக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரத்துக்கு அடிபணிய மறுத்த அதிபரை அரசியல்வாதி தன் வீட்டுக்கு அழைத்து தன்முன் பலவந்தமாக மண்டியிட்டு மன்னிப்பு கோரவைத்துள்ளதுடன், அதனை வெளியில் கூற வேண்டாம் என அச்சுறுத்தலும் விடுத்துள்ளார்.

இவ்வாறு உயிருக்கு அஞ்சி வாய்மூடியிருந்த இந்த அதிபர், இவ்வாறான அரசியல்வாதிகளின் அடாவடித்தனங்களை தட்டிக்கேட்கும் வகையில் முன்வந்து வாக்குமூலம் அளித்துள்ளார்" என்றார். (ஞ-ரி5)

# உணவு விடுதிகள் திடீர் சோதனை

கொழும்பு.ஜன.22

சிவனொளிபாத மலை யாத்திரை தொடர்பில் ஹற்றன் மற்றும் திக்ஓய நகரில் உணவு விடுதிகளில் நுவரெலிய மாவட்ட சுகாதார சேவை அதிகாரிகள், பரிசோதனைநடவடிக்கைகளை முன்னெடுத்தனர். நேற்று முன்தினம் நுவரெலிய மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் ஹற்றன் மற்றும் திக்ஓய நகரில் உள்ள சகல உணவு விடுதிகளையும் திடீர் சோதனை செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் காலத்தில் உணவு விடுதி தொடர்பில் சட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஞ-ரி5)

# நாம் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஐ.தே.க உருவாக்கியது

*சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவிப்பு*

எனவே மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இவ்வாறு மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார். மஸ்கெலியா பிரதேச சபைக்கு ஐ.தே.க. வின் "யானை" சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது;

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வந்ததனாலேயே வெள்ளை வான் கொள்ளை விவகாரம் இல்லை. உள்ளூராட்சி சபை தேர்தல் முடிந்தவுடன் ஒவ்வொரு வட்டார பிரிவுக்கும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் தோல்வியடைவதில்லை. மேலும் இந்த தேர்தலில் வெற்றிபெற்றாலோ, தோல்வியடைந்தாலோ இந்த அரசாங்கத்தை மாற்ற முடியாது. தொடர்ந்தும் மூன்று வருடத்துக்கு இந்த அரசாங்கம் தான் நீடிக்கும் தேர்தலின் போது எதிர்கட்சியினருக்கு வாக்களிப்பதன் மூலம் எந்தப் பயனும் இல்லை. தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியோர் ஒன்றிணைந்து இந்தத் தேர்தலில் வாக்குகளை கேட்கின்றோம். இதன்போது யார் வெற்றிப்பெறுவார் என்று மக்களுக்குத் தெரியும். என்றார். (ஞ.ரி4)

# ஐந்து ஆண்டுகளின் பின்னர் விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி ஜன. 22

சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தில் ஐந்து ஆண்டுகளின் பின்னர் பிரதேச செயலகத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின. விளையாட்டுப் போட்டிகளை பிரதேச செயலர் திருமதி தே.பாபு ஆரம்பித்து வைத்தார்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளும் ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கயிறிழுத்தல் போட்டிகளும் இடம் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் கோவிலாக்கண்டி ஶ்ரீமகாவிஷ்ணு அணியும் கச்சாய் கலைமகள் அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

இந்த அணிகளுக்கான இறுதிப் போட்டி பிரதேச விளையாட்டு விழாவில் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.



1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் தினமும் பயிற்சிகள் இடம்பெற்று வந்ததுடன் கழகங்களால் பல்வேறு சுற்றுப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. 1996 ஆம் ஆண்டு இப் பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டதால் பயிற்சிகளும் நடைபெறமுடியாத நிலை காணப்பட்டது.

2012 ஆம் ஆண்டு படையினர் இப் பகுதியிலிருந்து வெளியேறிய பின்னர் மைதானம் புனரமைக்கப்பட்டு மீண்டும் போட்டிகள் நடைபெற்றன.

2013 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு விளையாட்டுக் கழகமும் பயிற்சியில் ஈடுபடவுமில்லை போட்டிகளை நடத்தவுமில்லை. பிரதேசவிளையாட்டுப் போட்டிகள் மைதான ஒழுங்குகள் அமைந்துள்ள மட்டுவில் கைதடி வரணி போன்ற இடங்களில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டிகளும் பரிசில் வழங்கலும் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வந்தன. இவ் வருட விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது தொடர்பாக கழகப் பிரதிநிதிகளிடையே நடத்தப்பட்ட கலந்துரையாடலில் பங்குபற்றிய கழகங்களின் பிரதிநிதிகள் சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் போட்டிகளை நடத்த வேண்டுமென கேட்டுக் கொண்டதற்கிணங்க போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நீண்டகால இடைவெளியின் பின்னர் பொது விளையாட்டு மைதானத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டதைக் காணமுடிந்தது. (ரி2,9)

## மன்னார் மருத்துவமனையைப் பூட்ட வேண்டிய நிலை ஏற்படும்

### மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுச் செயலாளர் சுகாதார அமைச்சருக்கு கடிதம்

மன்னார்,ஜன.22

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள மருத்துவ நிபுணர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணுங்கள். இல்லா விட்டால் அபிவிருத்திக் குழுவே வைத்தியசாலையை பூட்டுப்போட்டு பூட்ட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு செயலாளர் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ணவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறையால் நிர்வாகம் நிலையிழந்து போகின்றது எனத் தங்களுக்கு பல முறை கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் எமது நிலையை தெரிவித்திருந்தோம். அரசதலைவருக்கும் கடிதம் எழுதியிருந்தோம்.

இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வீதியிலே குழந்தை பிறப்பு நிகழும் விசித்திரத்தை ஏற்படுத்திவிட்டீர்கள்.

மனித வாழ்வின் அத்தியாவசியத் தேவையாகிய மருத்துவ சேவையைக் கூட நாட்டு மக்களுக்கு வழங்க முடியாவிட்டால் அந்த ஆட்சி நடப்பதில் என்ன பயன்?

வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளை தீர்க்குமாறு பல்வேறு தரப்புகளால் விடுத்த கோரிக்கையை நிராகரிக்கும் நீங்கள் வைத்தியசாலையை மூடிவிடுங்கள். பொது மக்கள் தமது மருத்துவ சேவைக்கு வேறு இடங்களுக்கு செல்வார்கள். நீங்கள் மனிதபிமானத்தில் விலைபேசுகிறீர்கள் என்றே எண்ணுகின்றோம்.

தற்போதைய சூழலில் அவசிய தேவையாகிய மகப்பேற்று மருத்துவ நிபுணர் உட்பட பல்வேறு விதமான துறை சார்ந்த பிரிவுகளுக்கும் மருத்துவ நிபுணர்கள் இல்லை.

குறைந்தபட்சம் மயக்க மருந்து ஏற்றுவதற்குக்கூட ஆள் இல்லை. பெயரளவில் தான் மாவட்ட வைத்தியசாலையாகக் காணப்படுகின்றது.

கர்ப்பிணித் தாய்மார் வீதியில் இறங்கி போராடி ஒரு வாரம் ஆகியும் எந்தவிதத் தீர்வும் கிடைக்வில்லை. எந்த விதமான அதிகாரமும் இன்றி பெயரளவில் தான் மாகாண சுகாதார அமைச்சு இயங்குகின்றது. வைத்தியசாலையில் உள்ள பல்வேறு விதமான குறைபாடுகளை ஆராய்ந்து உடனடியாக தீர்வு காண வேண்டும்.

கொழும்பு சுகாதார அமைச்சு எங்களை வஞ்சிக்கின்றது. போர் வடுக்களை சுமந்து ஏதிலிகளாய் உள்ள சாமானிய மக்களின் அடிப்படை உரிமையில் வேண்டுமென்று சதி செய்து சவாரியிடுகிறது.

உங்களால் மாவட்ட வைத்தியசாலையை சரியாக நிர்வகிக்க விருப்பம் இல்லை என்றால் மூடி விடுங்கள். எத்தனை தடவைகள் தான் கோரிக்கை விடுப்பது. இது ஒன்றும் வலிந்து கெஞ்சிக் கடன் கேட்கும் விடயமல்ல. வருடக்கணக்கில் ஏமாற்றி அவமதிக்கிறீர்கள். விரக்தியின் உச்சநிலைக்கு உட்படுத்திவிட்டீர்கள். பாவம் எமது மக்களை ஏமாற்றாதீர்கள். நீங்கள் மட்டுமா எமது மக்களால் தெரிவு செய்யப்பட்ட வன்னியில் உள்ள ஒரு அமைச்சரும் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட இந்த விடயத்தில் எமது மக்களை பரிதாபத்துக்கு உட்படுத்தி விட்டார்கள் என்றுள்ளது.

(எ-56)

### தேர்தல் விதிமுறையை மீறி போட்டியிடும்

# அரச ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21

அரச திணைக்களங்களில் அல்லது நிறுவனத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்கள், அலுவலர்கள் உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பாளர்களாக முன்வந்துள்ள னராவென்றும், அவ்வாறு முன் வந்திருப்பார்களாயின் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க செயற்பட்டுள்ளனரா என்ற விடயங்கள் தொடர்பாக உடனடியாக பரீட்சித்து பார்க்கும் படி தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார். உரிய ஏற்பாடுகளுக்கிணங்க செயற்பாடில்லாத சந்தர்ப்பங்களில் அந்த ஊழியர்ளுக்கு அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளார்.



அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண சபைகளினதும் தலைமைச் செயலாளர்கள் அல்லது அமைச்சுக்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள், அனைத்துத் திணைக்க ளங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பியுள்ள அறிவுறுத்தலில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

எதிர்வரும் 93 உள்ளூர் அதிகார சபைக்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல்களுக்காக கடந்த டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் கையேற்கப்பட்டன. குறிப்பிடத்தக்க அளவு அரசாங்க சேவை ஊழியர்களும் அலுவலர்களும் தேர்தலுக்கு வேட்பாளர்களாக முன்வந்துள்ளனர். அவர்களுள் அரசியல் உரிமையுள்ள ஒருசில அரசாங்க ஊழியர்கள், அலுவலர்கள் தாபனக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனினும் அவ்வாறு விடுமுறை பெறாது வேட்பாளர்களாக தேர்தலில் போட்டியிடுகின்றனர். அரசியல் உரிமையற்ற ஒரு சில நீதித்துறை அலுவலர்கள், சமாதான அலுவலர்கள், பதவி நிலை அலுவலர்கள் கேட்டுவிலகாது கடமையாற்றும் போதே வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (262ஆம் அத்தியாயம்) 9ஆம் பிரிவில் உள்ளூர் அதிகார சபைகளின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள தகுதியற்ற அரசாங்க அலுவலர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளன.

அதற்கிணங்க 2007.06.1ஆம் திகதி நடைமுறையிலிருந்த சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப சம்பளம் ஒரு வருடத்திற்கு ரூ 2லட்சத்து 27ஆயிரத்து 280 (மாதாந்த சம்பளம் 18940) அல்லது அதற்கு மேற்பட்ட ஆரம்ப சம்பளத்தை கொண்ட அரசாங்க அலவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் வேட்பாளர்களாக முன்வந்துள்ள சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு உள்ளூர் அதிகார சபைகளின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள தகைமையில்லை என்பதையும் இத்தாள் அறிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று அவர்கள் உள்ளூர் அதிகார சபைக்காக போட்டியிட முடியாதென்பதால் அது தொடர்பாகவும் உங்கள் கவனத்தை செலுத்துவது கட்டாயமாகும்.

இந்த விதிமுறை தொடர்பான அறிக்கையொன்றை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகர்கள் பிரதிகளுடன் எனக்கு துரிதமாக அனுப்பிவைக்க வேண்டுமென தயவன்புடன் அறிவித்துக்கொள்கின்றென்.

அரசாங்க அலுவலகர்கள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தினதும் தாபனக்கோவையின் உரிய ஏற்பாடுகளுக்கும் இணங்கி ஒழுகாது செயற்படுவதன் காரணமாக தேர்தலை நீதியான தாகவும் பக்கசார்பின்றியும் நடத்தவதற்கு தடைகள் இருக்கின்றமையால் இச்சுற்று நிரூபம் வெளியிடப்பட்டது என்றுள்ளது.

(எ-4)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜன.22

2017ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றிய ஜி.சி.ஈ உயர்தர மாணவர்களுக்கான இரண்டாம் மொழி (சிங்களம், தமிழ்) டிப்ளோமா மற்றும் அடிப்படைச் சான்றிதழ் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மும்மொழி கற்கை நிலையத்தில் வார நாள்களில் வகுப்புகள் நடைபெறும். விண்ணப்பப் படிவத்தை இணையத்தில் பெற்று பூர்த்தி செய்து பாடசால்ல அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பணிப்பாளர், மும்மொழிக் கற்கை நிலையம் (யாழ்ப்பாணம் கலட்டி மெதடிஸ்த மிஷன் த.க பாடசாலை, இராமநாதன் வீதி, கலட்டி) அனுப்பி வைக்குமாறும், மேலதிக விவரங்களுக்கு 02122 31344 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(எ-21)

## விருது வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஜன.22

இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான 2017ஆம் ஆண்டுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கும் வைபவம் நடைபெறவுள்ளது.

நிகழ்வு கொழும்பு, 06 இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நிகழவுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(எ-21)

# அபிவிருத்தி வேலைகள் முழுமை செய்யப்பட்டும் இதுவரை அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

### பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் குற்றச்சாட்டு

தென்மராட்சி,ஜன.22

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்த கிராமிய உட்கட்டமைப்பு சிறப்பு அபிவிருத்தித் திட்ட வேலைகள் முழுமை செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. இதனால் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தால் வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டன. அதன்பிரகாரம் பிரதேசத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சாலை புனரமைப்பு மற்றும் சனசமூக நிலையங்கள், முன்பள்ளிக் கட்டடங்கள் போன்ற வேலைகள் அந்தந்த பொது அமைப்புக்களாலும் ஒப்பந்ததாரர்களாலும் மேற்கொள்ளப்பட்டன. தற்போது வேலைகள் முழுமை செய்யப்பட்டுள்ளன.

20 மில்லியன் ரூபா வேலைத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு உட்கட்டுமான வேலைகளின் தன்மைக்கேற்ப 15 லட்சம் ரூபா, 10 லட்சம் ரூபா, 5 லட்சம் ரூபா என வகைப்படுத்தப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குறித்த வேலைத்திட்டங்கள் தொடர்பாக பிரதேச செயலக மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தொழில்நுட்பவியலாளர்கள் போன்றோரால் பார்வையிடப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டது. எனினும் பல வேலைத்திட்டங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

வேலைத்திட்டங்கள் மேற்கொண்டவர்களில் ஒரு பகுதியினருக்கு ஒதுக்கப்பட்ட முழுத் தொகையும் மற்றொரு பகுதியினருக்கு ஒரு கட்டக் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளன. சில வேலைகள் முழுமையாகிஇரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லை - என்றனர்.

குறித்த வேலைத்திட்டங்களுக்கான நிதி மாவட்டச் செயலகத்திலிருந்து அனுப்பப்பட்டதும் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. கட்டு நிதி கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தினாலேயே கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்றது. தவிர பொது அமைப்புகள் தெரிவிப்பது போல வேலைக்கான நிதி நிறுத்தப்படவில்லை.

கடந்த வாரம் மாவட்டச் செயலகத்துக்குக் கிடைத்த சிறப்பு அபிவிருத்தித் திட்ட நிதி மாவட்டச் செயலகத்தால் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் வேலைகளின் அறிக்கைப் பிரகாரம் நேற்றுமுன்தினம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அடுத்த வாரம் கொடுப்பனவுகள் அந்தந்த பிரதேச செயலகங்களால் சேவைகளை மேற்கொண்ட அமைப்புக்களுக்கு வழங்கப்படுமென மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-9)

## இலங்கை வருகின்றார் லூங்ஸ்

கொழும்பு. ஜன.22
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்று சிங்கப்பூர் தலைமை அமைச்சர் லீ ஷியன் லூங்ஸ் இன்று இலங்கை வருகின்றார்.
எதிர்வரும் 24ஆம் திகதிவரை இலங்கையில் தங்கவுள்ள அவர் 23ஆம் திகதி காலை அரசதலைவர் செயலகத்தில் இரு நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# பிணைமுறி மோசடிக்கான தீர்வு நிரந்தரமானது அல்ல

### பந்துல குணவர்தன தெரிவிப்பு

*கொழும்பு, ஜன.22*
*மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்துக்கு தற்போது தீர்வு கிடைத்தாலும், அது நிரந்தரமானது கிடையாது. அதன் தாக்கம் 2045 ஆம் ஆண்டு வரை நீடிக்கும்.*




இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
சிறி லங்கா பொதுஜன முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தமது ஆட்சியில் இடம்பெற்ற 2 ஆயிரம் பில்லியன் ரூபா நட்டத்தை மறைக்க ஐக்கிய தேசிய கட்சி மக்கள் மத்தியில் தற்போது கபட நாடகத்தை அரங்கேற்ற ஆரம்பித்துள்ளது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி நடுத்தர மக்களே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். -என்றார். (ற)

பதறிய பொலிஸ் குழு தம்மைத் தற்காத்துக்கொள்ள நாலு பக்கமும் சிதறியோடியுள்ளது. இந்த ஓட்டத்தின் போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் T56 ரக துப்பாக்கியும் கீழே விழுந்துள்ளது.

## யானைகளின் தாக்குதலால் சிதறியோடினர் பொலிஸார்

கொழும்பு. ஜன.22
கதிர்காமம் பகுதியில் காட்டு யானைகள் பொலிஸ் உறுப்பினர்களை விரட்டியது. கையில் வைத்திருந்த ஆயுதத்தை எறிந்துவிட்டுத் தப்பியோடினர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.
கடந்த 17ஆம் நாள் கதிர்காமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் குழுவொன்று லுணுகம் வெஹர காட்டுப் பகுதியில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ள இரகசிய இடம் ஒன்றைச் சுற்றிவளைக்கச் சென்றுள்ளது.
நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 அளவில் கஞ்சா பயிரிடப்பட்டிருக்கும் இடத்தை குறித்த பொலிஸ் குழு அடைந்துள்ளது. அங்கு மறைந்திருந்த காட்டு யானைகள் எதிர்பாராதவிதமாக பொலிஸாரை துரத்தித்துரத்தித் தாக்கியுள்ளன.
பதறிய பொலிஸ் குழு தம்மைத் தற்காத்துக்கொள்ள நாலு பக்கமும் சிதறியோடியுள்ளது. இந்த ஓட்டத்தின்போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் T56 ரக துப்பாக்கியும்கீழேவிழுந்துள்ளது. பின்னர் துப்பாக்கியைத் தேடிய போதும் அது எங்கேயும் கிடைக்கவில்லை.
காட்டுப்பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கியைத் தேடும் பணிகளில் விசேட அதிரடிப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)



## தோப்பூரில் சிக்கிய விசித்திரப் பாம்பு!

கொழும்பு. ஜன.22
இலங்கையில் அதிசயமிக்க பாம்பு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவுகின்றது.
தோப்பூர் நீணாக்கேனிப் பிரதேசத்திலேயே அபூர்வமான நாகபாம்பு ஒன்று ஊர் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அச்சம் காரணமாக மக்கள் அதை அடித்துக் கொன்றுள்ளனர்.
மிகவும் நீள்மான நாகப்பாம்பு மனித முகத்தை ஒத்த தோற்றத்தைக் கொண்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இது பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## நல்லாட்சி எதிர்க்கட்சியும் நாட்டுக்குள் இருக்கிறது

### மகிந்த கிண்டல்

நாட்டில் தற்போது நல்லாட்சி அரசு இருப்பது போன்று நல்லாட்சி எதிர்க்கட்சியும் இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.
நல்லாட்சியில் எதிர்க்கட்சியின் பங்கு என்ற தலைப்பில் மகிந்த ராஜபக்ச வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் போல் செயற்பட்டு நடித்து வருகின்றன.
கடந்த மூன்று ஆண்டுகளில் நல்லாட்சி அரசு எடுத்த சகல ஜனநாயக விரோத செயல்களுக்கும் இந்த கட்சிகள் ஒத்துழைப்பை வழங்கின இந்த அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிப்பது போல் பொய்யாக நடிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கட்சிகள்.
2004 ஆம் மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணி நான்கு அமைச்சுக்களை நிர்வகித்தமையானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தை நிர்வகிப்பதற்கு சமனானது -என்றார். (ற)

## மகிந்தவுடன் இணைந்துள்ள நல்லவர்களுக்கு அவகாசம்

கொழும்பு. ஜன.22
மகிந்த குழுவில் உள்ள நல்லவர்கள் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்வதற்கு எதிர்வரும் 7ஆம் திகதிவரை கதவு திறந்திருக்கும்.
இவ்வாறு முன்னாள் அரச தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போசகருமான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.
வத்தளையில் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சிறி லங்கா பொதுஜன பெரமுனவிலுள்ளவர்கள் சிறி லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சென்றவர்கள். அவ்வாறு சென்றவர்களுள் நல்லவர்களும் உள்ளனர். அவர்கள் மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ள அவகாசம் வழங்குகின்றோம்- என்றார். (ற)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பரப்புரைக் கூட்டம் நேற்று வட்டக்கச்சியில் நடைபெற்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அந்தக் கட்சியின் வேட்பாளர்களைப் பலப்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை குருகுலராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-35)

## காணாமல் போன மீனவர் சடலமாக மீட்பு

மன்னார்,ஜன.22
மீன்பிடிக்க கடலுக்குச் சென்று காணாமல் போன மீனவர் ஒருவர் மூன்று நாள்களுக்குப் பின் கடந்த வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.
மன்னார் வங்காலை கிராமத்தைச் சேர்ந்த இவர் கடந்த 17 ஆம் திகதி காலை படகு ஒன்றில் மீன் பிடிக்கத் தனியாகக் கடலுக்குச் சென்றுள்ளார்.
உரிய நேரத்துக் வீடு திரும்பாத நிலையில் சக மீனவர்கள் கடலில் சென்று தேடிய போது படகு மாத்திரம் கண்டு பிடிக்கப்பட்டது.
தொடர்ச்சியாக இரு தினங்கள் நூற்றுக் கணக்கான மீனவர்கள் இணைந்து தேடிய போதும் குறித்த மீனவர் கண்டு பிடிக்கப்படவில்லை.
இந்த நிலையில் நேற்று முன்தினம் கடலில் மிதந்த நிலையில் சடலம் சக மீனவர்களால் மீட்கப்பட்டார். மேலதிக விசாரனை களை வங்காலை பொலிஸார் மேற்கொண்டு வருகிறனர்.
(ற.ரி4,56)

## குளவிக் கொட்டுக்கு இலக்காகிய மாணவிகள் மருத்துவமனையில்

பதுளை,ஜன.22
பதுளையில் கடந்த வெள்ளிக்கிழமை குளவிக் கொட்டுக்கு இலக்காகிய மாணவிகள் மருத்துவமனையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.
பதுளையிலுள்ள பாடசாலை ஒன்றில் மரத்திலிருந்த குளவிக் கூடு பலத்த காற்று வீசியேகலைந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி4)

## நீர்த்தேக்கத்திலிருந்து சடலம் மீட்பு

கொழும்பு,ஜன.22
தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து ஆணின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டது. இந்தச் சடலமானது தலவாக்கலை வாடி வீட்டுக்கு அருகில் மிதந்ததையடுத்து பொலிஸாருக்கு பொது மக்கள் தகவல் வழங்கினர் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இதுவரை மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்படவில்லை. சடலமானது இரு தினங்களுக்கு முன் நீர்த்தேக் கத்தில் விழுந்திருக்கக் கூடுமென சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# தொடருந்தை மறித்து மக்கள் போராட்டம்





வவுனியா,ஜன.22
ஓமந்தை பெரியவிளாத்திக்குளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி தொடருந்துத் திணைக்களத்தால் மூடப்பட்டுள்ளமையை கண்டித்து அந்தப்பகுதி மக்கள் தொடருந்தை மறித்து நேற்று முன்தினம் முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை பெரிய விளாத்திக்குளம் கிராம மக்கள் கடந்த 150 வருடகாலமாக இந்த பாதையை பயன்படுத்தி வந்த நிலையில் தொடருந்து திணைக்களம் இந்த வீதியை மூடி நடைபாதையை அமைத்துள்ளது. இதனால் இந்த வீதி முற்றாக மூடப்பட்டுள்ளது.
இந்த பாதையை பயன்படுத்தும் அரசுமுறிப்பு மற்றும் விளாத்திக்குளம் கிராம மக்கள் இரண்டு கிலோமீற்றர் சுற்றிப் பயணம் செய்யவேண்டியுள்ளது.
எனவே தாம் 150 வருட காலமாக பயன்படுத்திய பாதை தமக்கு வேண்டும் என்றும், தொடருந்து நடைபாதையை இடிக்காமல் அதன் அருகே தமக்கான பாதையை அமைத்துத் தருமாறும் இந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
(ற-ரி5)



## மண் மேடு சரிந்ததில் ஒருவர் உயிரிழப்பு

கண்டி,ஜன.22
கண்டி அஸ்கிரிய பிரதேசத்தில் மண் மேட்டை வெட்டிக் கொண்டிருந்த நபர் ஒருவர், மண் மேடு சரிந்ததில் அதில் சிக்கி உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.
மண் மேடு சரிந்ததில் 3 பேர் சிக்கியுள்ள நிலையில், ஒருவர் உயிரிழந்தார்.
ஏனைய இருவரும் மீட்கப்பட்டு, கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

## தோட்டத் தொழிலாளர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,ஜன.22
நானுஓயா பிரதேசத்தின் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
பிரதான தோட்டங்கள் சிலவற்றுக்கு பயணிக்கும் ரதெல மெடிகெலே வீதியை புனரமைத்துத் தருமாறு கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
நானுஓய பிரதேசத்தின் 400க்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் எதிர்ப்பு கோசங்களை எழுப்பியவாறு, பேரணி ஒன்றையும் நடத்தினர். (ற-ரி5)

## விகாரையில் தீ விபத்து

கொழும்பு,22
மதுகம யடதொல அளுத்கம்கொட விகாரையில் நேற்று முன்தினம் தீப்பரவல் ஏற்பட்டது.
இந்தத் தீப்பரவலில் விகாரையின் பிக்குகள் தங்குமிடம் கடுமையாக சேதமடைந்தது என வெலிபென்ன பொலிஸார் தெரிவித்தனர்.
தீயை அணைக்க முற்பட்ட பிக்கு ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில், களுத்துறை நாகொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ற-ரி5)





## அறுவடை மற்றும் பொங்கல் நிகழ்வு

கிளிநொச்சி,ஜன.22
சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அறுவடை மற்றும் பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி வட்டக்கச்சிப் பண்ணையில் இடம்பெற்றது.
சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரட்ண பல்லேகம முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட நிகழ்வில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கிளிநொச்சி முல்லைத்தீவு கட்டளை அதிகாரி கேணல் ரட்ணப்பிரிய, கிளிநொச்சி பொறுப்பதிகாரி மேஜர் சாகர மற்றும் மதகுருமார்கள், சிவில் பாதுகாப்புத் திணைக்கள பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற,ரி4)

# குளக்கட்டில் மீன்கழிவுகளை கொட்டியவர் நையப்புடைப்பு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜன.22

குளக்கட்டுப் பகுதியில் மீன்கழிவுகளைக் கொட்டிவிட்டுச் சென்றநபர் ஒருவர் இளைஞர்களால் பிடித்துத் தாக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுமாலை வவுனியாவில் இடம்பெற்றது.

பொது இடங்களில் குப்பை கொட்டுவோருக்கு எதிராக இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வரும் நிலையில் இளைஞர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது: மீன்கழிவுகளைப் பொதிசெய்து மோட்டார் சைக்கிளில் எடுத்து வந்த சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் பண்டாரிக்குளத்தை அண்டிய விநாயகர் ஆலயத்துக்கு அருகில் அதனை வீசிவிட்டு நகர்ந்துள்ளார். சற்றுத்தொலைவில் நின்றிருந்த இளைஞர்கள் சிலர் இதனை அவதானித்தனர். அவரை துரத்திப்பிடித்து நையப்புடைத்தனர். பண்டாரிக்குளம் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

மீன்கழிவுகள் தோணிக்கல் பகுதியில் மீன்வியாபாரம் செய்யும் ஒருவருடையது என்றும், கழிவுகளைக் கொண்டு சென்று வீசுவதற்குக் கூலி தருவார் என்றும் அந்தநபர் பொலிஸாரிடம் தெரிவித்தார். இதையடுத்து பொலிஸார் கழிவுகளை வீசிய நபரை



பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். சம்பந்தப்பட்ட மீன் வியாபாரியையும் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அறிவித்தனர்.

இதேவேளை, பண்டாரிக்குளம் குளக்கட்டுப்பகுதியில் விநாயகர் ஆலயம் உள்ளது. சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படும் இடமாகும். நேற்று முன்தினம் இந்தப் பகுதியில் வைத்து பெண் ஒருவருடைய தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சங்கிலியை அறுத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டனர். சம்பவத்தில் குறித்த பெண் தனது சங்கிலியைப் இழுத்துப் பிடித்து மல்லுக்கட்டியதால் பாதிச்சங்கிலி பெண்ணின் கைகளிலும், மீதிச்சங்கிலி திருடனின் கைகளிலும் சென்றுள்ளது. இச்சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ய-21)

## இரு கால்களையும் இழந்து மீன்பிடித்து வாழும் நபர்

வாழ்வாதாரத்துக்கு உதவி கோருகிறார்



கிளிநொச்சி, ஜன.22

இருகால்களையும் இழந்தநிலையில் மீன்பிடித்துவாழ்கிறார். கிளி. நொச்சியின் எள்ளுக்காட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்துவருகிறார் குடும்பத் தலைவர் ஒருவர். இவர் தனக்கு வாழ்வாதார உதவிகளை தந்துதவுமாறு பொது அமைப்புகள் மற்றும் பரோபகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உருத்திரபுரத்தில் உள்ளதே எள்ளுக்காடு கிராமம். இந்தக் கிராமத்தில் வசிக்கும் 5 பிள்ளைகளின் தந்தையான இலட்சுமணன் தங்கராசா என்பவர் இறுதிப் போரில் சிக்கி இரு கால்களையும் முழங்காலுக்கு மேல் இழந்துள்ளார், வலதுகையில் இரு விரல்களும், இடதுகையில் ஒரு விரலும் இல்லை. உடலிலும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் இருகால்களும் இல்லாத நிலையிலும் அவர் சுமார் 10 கிலோமீற்றருக்கு அப்பால் சென்று பூநகரி குடமுறுட்டி ஆற்றில் மீன்பிடித்து அதனை விற்பனை செய்து வாழ்ந்து வருகின்றார். பாலத்தின் கீழ்பகுதியில் அமர்ந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றார்.

தனது குடும்ப நிலை தொடர்பாக கருத்து தெரிவித்த இ.தங்கராசா:

எனக்கு 5 பிள்ளைகள், இருவர் திருமணம் செய்துவிட்டனர். ஏனையவர்கள் படிக்கின்றனர். எனக்கு பிரதேச செயலகம் ஊடாக மாதாந்தம் 3000 ரூபா தருகின்றனர். அது எனக்கு போதுமானதாக இல்லை. எனது மனைவிக்கு ஒரு கையில் ஒரு விரல் மாத்திரமே உள்ளது. அதனுடன் அவர் பண்ணையில் (சிவில் பாதுகாப்பு நிலையம், சி.ஸ்.ரி) வேலைசெய்து வருகின்றார். அதனைக் காரணம் காட்டி எமக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை அத்தோடு மகளும் காயமடைந்துள்ளார். எனது அம்மாவும் பெருத்தகாயமடைந்து, கை பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனக்கு இங்கு பிடிக்கின்ற மீனை வெளியில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு ஏதாவது உதவிகள் செய்து தரப்பட வேண்டும். அல்லது வீட்டில் இருந்து கோழி வளர்ப்பதற்கு உதவிகளைச் செய்துதர வேண்டும் -என்றார் கண்ணீருடன். (ய-6)

## அசம்பாவிதங்களில் காயமடைந்த 7பேர் மருத்துவமனைகளில்

தென்மராட்சி, ஜன.22

சாலை விபத்துகளில் சிக்கி காயமடைந்த ஆண்கள் நால்வரும், தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூன்று பெண்களும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

கைதடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சாலையில் சென்ற இரு மோட்டார் சைக்கிள்கள். வளைவொன்றில் திரும்புகையில் விபத்தில் சிக்கின. ஒன்றுடன் ஒன்று மோதுண்டதில் அவற்றில் பயணித்த மூவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கைதடி கிழக்கைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். ஏனைய இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்றுக்காலை மீசாலை மடத்தடியில், சாலையில் சென்ற வாகனத்தின் பின்பகுதி மோட்டார் சைக்கிளின் கைபிடிப் பகுதியில் தட்டுப்பட்டதில் காயமடைந்த இளைஞர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதேவேளை, மந்துவில் கிழக்குப் பகுதியில் இரு பெண்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 41வயது குடும்பப் பெண்ணும், 21 வயது இளம் பெண்ணும் காயமடைந்தனர். அத்துடன் கெற்பேலி மேற்குப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 43 வயது குடும்பப் பெண்ணும் காயமடைந்தார். இவர்கள் மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-9)

## முல்லையில் பொலிஸ்மா அதிபர்





முல்லைத்தீவு, ஜன.22

பொலிஸ் மா அதிபர் பூஜித்ஜெயசுந்தர முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகைதந்து பொலிஸ் நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளார்.

நேற்றுக்காலை முல்லைத்தீவு நகரத்தில் பொலிஸ் நிலையம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது பொலிஸ்மா அதிபருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டு, பொலிஸாரின் அணிவகுப்பு மரயாதையும் இடம்பெற்றது.

பொலிஸ்மா அதிபர், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மதத்தலைவர்களின் ஆசியுடன் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது. பொலிஸ்நிலையத்துக்கானநினைவுக்கல்லும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதன்போது முல்லைத்தீவு பொலிஸாரால் பொலிஸ்மா அதிபருக்கு நினைவுப் பரிசில் ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டது. சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் பொலிஸ்மா அதிபர் உரை நிகழ்த்தினார்.

145.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த பொலிஸ் நிலையம் ஒரு ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி3)

## போதையில் சாரத்தியம் இருவருக்கு ரூ. 6000 தண்டம்

கிளிநொச்சி, ஜன.22

மதுபோதையில் வாகனம் செலுத்திய இருசாரதிகளுக்கு தண்டத்துடன் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் இரு வாரங்களுக்கு நிறுத்தி வைத்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மது போதையுடன் வாகனத்தை செலுத்தினார்கள் என இருவர் கைதுசெய்யப்பட்டனர். இரு சாரதிகளையும் பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணத்தால் இருவருக்கும் தலா 6000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சாரதி அனுமதிப்பத்திரங்களை இரு வாரங்களுக்கு இடைநிறுத்தி வைத்து தீர்ப்பளித்தது நீதிவான் மன்று. (ய-6)

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மணிக்கூட்டு வீதி அருள்மிகு சிறிஅரசடிவிநாயகர் தேவஸ்தான ஒன்பதாவது வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 11.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெற்று, பெப்ரவரி 2ஆம் திகதி கொடியிறக்கத்துடன் நிறைவுபெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ய-4)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மகிந்தவின் வருகையும் அதிலுள்ள எதிர்பார்ப்பும்

இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த எதிர்வரும் முதலாம் திகதி வடக்குக்கு வரவுள்ளார். நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியை ஆதரித்துப் பரப்புரைசெய்வதற்காகவே அவர்இங்குவரவுள்ளார் என்று அறியமுடிகிறது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அவர் உரையாற்றவுள்ளார் என்றும் தெரியவருகிறது. தேர்தல் பரப்புரை என்ற ஒன்றைத் தாண்டி பல விடயங்களில் மகிந்தவின் வருகை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

அரசதலைவருக்காககடந்த2015ஆம் ஆண்டுநடைபெற்ற தேர்தலில் தமிழர் தாயகத்தில் வாழும் மக்கள் தமது பெருவாரியான வாக்குகளை மைத்திரிக்கு வ்ழங்கி, மகிந்தவை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். மகிந்தவின்தோல்விக்கு முக்கிய காரணமாகஅமைந்தது சிறுபான்மை இனத்தவர்களின்வாக்குகளேஎன்று பன்னாட்டு ஊடகங்களே விதத்தோம்பியிருந்தன. தற்போதைய அரசதலைவர்மைத்திரியும் பல உரைகளில் இதைக் குறிப்பிட்டுள்ளார். எனவே தமிழ் மக்களால்கிடைத்த படுதோல்விக்குப் பின்னர்தமிழ் மண்ணில் தமிழ் மக்களை மீண்டும் எதிர்கொண்டு பரப்புரைகளை முன்னெடுக்கவுள்ளார் மகிந்த.

மைத்திரி – ரணில் கூட்டாட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் புதியதொரு அரசமைப்பை உருவாக்க கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. கூட்மைப்புவடக்கு– கிழக்கு இணைப்பு, திரும்பப்பெறப்பட முடியாத இறுக்கமான பொறிமுறையூடாக அதிகாரப் பகிர்வு, நிதித்துறைச்சுதந்திரம் ஆகியவற்றை தனது மூன்று அம்சக்கோரிக்கையாக வைத்துள்ளது. இவற்றின் மட்டில் சிறிதும் கீழிறங்கிவர தன்னால் இயலாது என்ற நிலைப்பாட்டையும் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளது அது.

கூட்டமைப்பின்கோரிக்கைகள்நிறைவேறினால்தமிழர்தாயகம் உருவாகும் என்றவாறாக விஷமப் பரப்புரைகளை முன்னெடுத்துவரும் அரசியல்வாதிகள் பலர். அவர்களில் மகிந்தவும் ஒருவர். புதிய அரசமைப்பு நிறைவேறினால், நாடாளுமன்றத்தை விடவும் மாகாண சபைகள் அதிகாரம் பெற்றுத் திகழும். இந்த நிலமை தமிழர் தாயகம் உருவாக வழிசமைக்கும். இதற்காகவேபல்லாயிரக்கணக்கானசிப்பாய்கள் தமது இன்னுயிரைத்தியாகம் செய்தனர்என்றவாறாக தனது முன்னைய உரையொன்றில் மகிந்த குறிப்பிட்டிருந்தார். புதிய அரசமைப்பு என்பது தேவையற்றதொன்று என்றும் அவர் வெளிப்படையாகவேகருத்து வெளியிட்டிருந்தார். இத்தகையபின்னணியில் மகிந்தவின் வருகை எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தித்தான் விட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் ஆற்றிய உரையொன்றில் மகிந்த, ‘தீர்வொன்றை வழங்குவதற்கு பலவழிகளிலும்நாம்முயற்சித்தோம். அரசமைப்பில் மாற்றம் கொண்டுவருவதற்கும் உத்தேசித்திருந்தோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதய சுத்தியுடன்செயற்படவில்லை. நான்விடுத்த அழைப்புக்களைசம்பந்தன்நிராகரித்தே செயற்பட்டார். தமிழ் மக்களுக்குரிய தீர்வை வழங்கும் எண்ணத்தில் இருந்து நான் இன்னும் பின்வாங்கவில்லை’ என்றும் மகிந்த குறிப்பிட்டிருந்தார். தனது முன்னைய உரைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்ட விதமாக மகிந்த மேற்கொண்டிருக்கும் இந்த உரை வடக்குக்கு அவர் மேற்கொள்ளவுள்ளபயணத்தின் முதல்கட்டமாகவே பார்க்கப்படுகிறது. இவ்வாறிருக்க மகிந்த வடக்கில் வைத்து என்னென்னவெல்லாம் தெரிவிக்கப் போகிறார், புதிய அரசமைப்புஉருவாக்கத்திலும்சரி, ஏனைய விடயங்களிலும்சரி வடக்கில் வைத்துத் தெரிவிக்கவுள்ள அவரது கருத்துக்கள் எவ்வாறு அமையவுள்ளன என்பது தொடர்பில் கழுகுப் பார்வை பலமாகவே விழுந்துள்ளன.

# நாட்டின் அரசியல் மாற்றமும் தமிழர்களின் தலைவிதியும்

சேரலாதன்

உயர்நீதிமன்றம்வழங்கிய வியாக்கியானத்தின் பிரகாரம் தற்போதைய அரச தலைவர்இன்னமும்இரண்டு வருடங்கள் மாத்திரமே தமது பதவியை வகிக்க முடியும். அதற்குப் பிறகு நாட்டில் நிகழப்போகும்அரசியல்மாற்றங்கள், நாட்டின் தலைவிதியை நிச்சயமாக மாற்றி விடப்போகின்றன என்பதை இப்போதே கூறிவிட முடியும்.

### அரசமைப்புக்கான 18ஆவது திருத்தமும் 19ஆவது திருத்தமும் ஒன்றுக்கொன்று முரணானவை

அரசமைப்பின்19ஆவதுதிருத்தம், அரச தலைவரொருவரது பதவிக்காலம் 5 வருடங்கள் மட்டுமேஎனமட்டுப்படுத்தியுள்ளதுடன், ஒருவர் அரசதலைவர்பதவியைஇரண்டுதடவைகள் மட்டுமே வகிக்க முடியுமெனவும் கூறுகின்றது. இதன் காரணமாகவேதற்போதைய அரச தலைவரின் பதவிக்காலம் ஆறு வருடங்களிலிருந்து ஐந்தாகக் குறைக்கப்பட்டது. முன்னர் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச தாம் மூன்றாவது தடவையாகவும் அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தை மேற்கொண்டார். ஆனால் பின்னர் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது திருத்தம் அதை இல்லாமல் செய்துவிட்டது. இதனால் மகிந்தவின் அரச தலைவருக்கான கனவு கலைந்துவிட்டது. இதனால் அடுத்த அரச தலைவர் தேர்தலில்அவர்தமதுசார்பில்தமக்கு நம்பிக்கையான ஒருவரை நிறுத்துவாரென எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆனால்இடம்பெறப்போகின்ற அரசதலைவருக்கானதேர்தல் கடந்தமுறைபோன்றுஅமைந்துவிடாது என்பதை உறுதியாகக்கூறமுடியும்.

கடந்தமுறை வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ். முஸ்லிம் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமது அமோக ஆதரவைவழங்கியதால்அவரால் மகிந்தவை வெல்ல முடிந்தது. மகிந்தவும் இதைப்பகிரங்மாகவே ஒப்புக்கொண்டார். ஆனால் அடுத்து இடம்பெறப் போகும் தேர்தலில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலையே காணப்படுகின்றது.

தற்போதைய அரச்ச தலைவரின் செயற்பாடுகள் தெற்கில் மட்டுமல்லாது வடக்கிலும் அதிருப்தியை ஏற்படுத்திவிட்டுள்ளன. வடக்கைப் பொறுத்தவரையில் மக்களின் பிரச்சினைகள்எதுவும்தீர்வுகாணப்படாமல், ஆரம்ப நிலையில் உள்ளதைப் போன்றோ காணப்படுகின்றன. இவை தொடர்பாக அரச தலைவரால் பல தடவைகள் உறுதிமொழி வழங்கப்பட்டபோதிலும் அவைகாற்றில்பறக்கவிடப்பட்டுள்ளன. இதனால்கூட்டமைப்பின் மீதும் தமிழ் மக்கள் கோபத்தில் உள்ளனர். இதன் காரணமாக கடந்த தடவை போன்றுமைத்திரிபாலசிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு சம்பந்தனால்தமிழ்மக்களிடம் வேண்டுகோள் விடுக்க முடியாது. மக்களும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

### தெற்கு மக்கள் மத்தியில் மகிந்த ‘ஹீரோ’வே

தெற்கைப்பொறுத்தவரையில் அங்குள்ள மக்கள் மகிந்த ராஜபக்சவை ஒரு போர் வெற்றி வீரனாகவேஇன்னமும்கருதுகின்றனர். புலிகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றியவர் மகிந்தவே என்ற நன்றியுணர்வு அவர்களிடம் இன்னமும் காணப்படுகின்றது.

மேலும்மக்களின்மனமறிந்து மகிந்தவும் செயற்படுகின்றார். கிராமிய மட்டத்தில் அவருக்கு நிறையவே செல்வாக்குக் காணப்படுகின்றது. அந்த மக்கள் அவர் சொல்வதை வேதவாக்காகவேகொள்கின்றனர். இதனால் மகிந்த சுட்டிக்காட்டியவருக்கேஅவர்கள்தமதுஆதரவைத்தெரிவிக்கப்போகின்றனர்.

இதேவேளை மைத்திரிபால சிறிசேன தாம் இரண்டாவது தடவையும் அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆனால் அவர் தமது முன்னைய நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கவும் கூடும். அவ்வாறு நடந்து அவர் தேர்தலில் போட்டியிட்டாலும், அவர்கடும் சவால்களுக்குமுகம்கொடுக்க நேரிடும். கடந்த தடவை ஐக்கிய தேசியக்கட்சியின் பூரண ஆதரவு அவருக்கு இருந்தது. அந்தக்கட்சியின்தலைவரான ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் தேர்தலில் மகிந்தவைத் தோற்கடித்து மைத்திரியை வெற்றிபெற வைத்ததில்முக்கியபங்கைவகித்தார். இவரது முயற்சி இல்லாதிருந்தால்தேர்தல்முடிவுவேறுவிதமாகஅமைந்திருக்கும். ஆனால் இன்று அவ்வாறானதொரு நிலை காணப்படவில்லை. ஐ.தே.கவினர் மைத்திரிக்கு எதிரான நிலைப்பாட்டையே தற்போது கொண்டுள்ளனர்.

இதைவிட ரணில் விக்கிரமசிங்கஅடுத்தஅரசதலைவருக்கானதேர்தலில்போட்டியிடுவதற்கானஏதுநிலையொன்றும் காணப்படுகின்றது. அவ்வாறு ஒரு சூழ்நிலை உருவாகுமானால்மைத்திரியும், மகிந்தவும் ஒன்றாக இணைந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இருக்காது. ஏனென்றால் இந்த இருவருமே சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய தலைவர்கள் ஆவார்கள். தேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றிபெறவேண்டுமானால் மகிந்தவும், மைத்திரியும்கட்டாயமாகஒன்றிணைந்துகொள்ள வேண்டும். இதனால் ஐக்கிய தேசியக்கட்சி கடுமையான சவால்களை எதிர்கெரள்ள நேரிடக்கூடும்.

### ஏமாற்றத்தின் விளிம்பில் தமிழ் மக்கள்

இதில்தமிழர்தரப்பின்நிலைப்பாடுசிக்கல்நிறைந்ததாகமாறிவிடப் போகின்றது. ஏனென்றால் தமிழ்மக்கள் தற்போது ஏமாற்றத்தின் விளிம்புக்கே சென்றுவிட்டனர். தமதுதலைமைகள் சுட்டிக்காட்டுபவர்களுக்குஅவர்கள்இனியும்வாக்களிப்பார்களென எதிர்பார்க்க முடியாது. எது எப்படி இருப்பினும் சிங்களத் தலைவர் ஒருவரே அந்தப் பதவியை அலங்கரிக்கப்போகின்றார். இவர்களிடமிருந்துகடந்தகால அனுபவங்களையே தமிழர்கள் எதிர்கொள்ளப் போகின்றனர். மகிந்த தரப்பைச் சேர்ந்த ஒருவர் நாட்டின் தலைமைப் பொறுப்பைஏற்பாரானால்தமிழர்பகுதியில்இப்போதுகாணப்படுகின்ற அமைதியான சூழ்நிலையைத் தொடர்ந்து எதிர்பார்க்க முடியாது. அமெரிக்காவில் விலங்குகளை விடக்கேவலமாகநடத்தப்பட்டஆபிரிக்க கறுப்பின மக்கள்இன்று சுதந்திரப்பிரசைகளாகஉலவுகின்றனர். பெருபான்மையினராக இருந்தும் சிறுபான்மை வெள்ளையர்களால்சிறுமைப்பட்டிருந்த தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்கள் இன்று தம்மைத் தாமே ஆள்கின்றனர். இவ்வாறு பல நாடுகளை உதாரணமாக எடுத்துக் கூறலாம்.

ஆனால் இலங்கைத் தமிழ் மக்களின் அவலம் தொடர்கதையாகவே நீண்டு செல்கின்றது. இந்த நிலையில் நாட்டில் என்னதான்அரசியல்மாற்றங்கள் நிகழ்ந்தாலும் தமிழ் மக்களதுவாழ்வில்சுபீட்சம்ஏற்படும் என்ற நம்பிக்கை பலவீனமடைந்தே காணப்படுகிறது.

# எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல இந்தியத் தூதுவரின் கருத்துக்கள்

இந்துமதி



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைப்பது தொடர்பாக இந்தியா எதுவுமே செய்ய முடியாது. இவ்வாறு அழுத்தம் திருத்தமாகக்கூறிவிட்டார் இலங்கைக்கான இந்தியத் தூதுவரான தன்ஜித் சிங். வடக்கையும், கிழக்கையும் இணைப்பதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும்போதே இந்தியத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இதுவொரு இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்றும், நீதிமன்றத்துடன் தொடர்புடைய ஒரு விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் எந்தநாட்டின் உள்விவகாரங்களிலும் இந்தியா தலையிடாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் இணைக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாணங்கள்**

1987ஆம் ஆண்டு ராஜிவ் காந்தியும், ஜே. ஆர் ஜெயவர்த்தனாவும் இணைந்து மேற்கொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டன. இதற்கென இலங்கையின் அரசமைப்பில் 13 ஆவது திருத்தமும் மேற்கொள்ளப்பட்டது. இணைந்த வடக்குக் கிழக்கில் மாகாணசபை உருவாக்கப்பட்டுத் தேர்தலும் இடம்பெற்றது. ஆனால் புலிகள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் வரதராஜப்பெருமாள், ஈ.பி. ஆர்.எல்.எப் சார்பில் போட்டியிட்டு முதலமைச்சரானார். இணைந்த வடக்குக் கிழக்கை இனவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. தனித்தமிழீழம் உருவாகுவதற்கான ஓர் அடித்தளமே அதுவென அவர்கள் நினைத்தனர். அப்போது உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதியரசராக சரத் என். சில்வா பதவி வகித்தார். இதனைத் தமக்குச் சாதகமாகக் கருதிய இனவாதிகள் வடக்குக்கிழக்கு இணைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

பலராலும் எதிர்பார்க்கப்பட்டதற்கு அமைவாகத் தீர்ப்பும் வெளியானது.

வடக்கும் கிழக்கும் மீண்டும் பிரிக்கப்பட்டன. இரண்டு மாகாணசபைகளும் அமைக்கப்பட்டன. இதில் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்தான். கிழக்கு அவர்களின்கைகளிலிருந்துபிரிந்துசெல்கின்றநிலையிலுள்ளது. தமிழர் ஒருவர் முதலமைச்சர் பதவியை வகிக்க முடியாததொரு நிலையும் உருவாகிவிட்டது.

**வடக்கு- கிழக்கு மீண்டும் இணைக்கப்படுவதற்கு கிழக்கு முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவிப்பு**

தற்போது வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழர்கள் இரண்டுமாகாணங்களும்மீண்டும்இணக்கப்படவேண்டுமெனக்கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் முஸ்லிம் தரப்பினரின் எதிர்ப்பு இதற்கு எதிராகக்கிளம்பியுள்ளது. வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட்டால்தாம்கிழக்கில்சிறுபான்மையினராக மாறிவிடுவோமென இவர்கள் அஞ்சுகின்றனர்.

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் பிரச்சினையைத்தட்டிக்கழிக்கும் விதமாக வடக்கு முதலமைச்சரின் கோரிக்கைக்குப் பதிலளித்ததை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்தியாவும்இலங்கையும்இணைந்து செய்து கொண்ட ஒப்பந்தம் சாதாரணமான தொன்றல்ல. இதை மதித்து நடக்க வேண்டிய பொறுப்பு இந்திய, இலங்கை நாடுகளுக்கு உள்ளது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்பொன்றின்பிரகாரம் இந்த ஒப்பந்தம் செல்லுபடியற்றதாக்கப்பட்டு விட்டது. இலங்கைக்கு இது மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். ஆனால் இந்தியா இதைக் கவனத்தில் கொள்ளாது விட்டமை இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகபூமி என்ற கனவு தற்போது கலைந்து விட்டது. தமிழர்கள் அங்கு சிறுபான்மையினராக மாற்றப்பட்டு விட்டனர். இந்த நிலையில் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படும் போதுதான் அவர்கள் தலைநிமிர்ந்து வாழ முடியும்.

**கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்ததன் மூலம் இந்தியா தமிழ் நாட்டுக்குத் துரோகமிழைப்பு**

இந்தியா கச்சதீவை இலங்கையிடம் தாரை வார்த்தமை தமிழ்நாட்டுமக்களுக்கும் மாநில அரசுக்கும் செய்த மிகப் பெரிய துரோகமாகும். தமிழ் நாட்டின் இராமநாதபுரம் மன்னருக்குச் சொந்தமாக இருந்த கச்சதீவை இந்தியத் தலைமை அமைச்சராக இருந்த இந்திராகாந்தி அம்மையார், அப்போதைய இலங்கை தலைமை அமைச்சரான சிறிமாவோவுடனானபேச்சுக்களையடுத்துஇலங்கைக்கு வழங்கித் தமது நட்பை வெளிப்படுத்தினார். ஆனால் தமிழக மீனவர்கள் கச்சைதீவை இழந்ததால் தினமும்பாதிப்பைஎதிர்கொண்டுவருகின்றனர். வடக்கும்கிழக்கும்பிரிக்கப்பட்டதால் இலங்கைத்தமிழர்களும் இனரீதியான பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர்,

ஒருநாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாதென இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கூறியுள்ளமை ஏற்கத்தக்கதல்ல. இலங்கையில் இந்தியா மூக்கை நுழைத்ததன் காரணமாகவே இங்குள்ள தமிழர்கள் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டிநேரிட்டது. இறுதிப்போரில் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படுவதற்கும் இந்தியாவே காரணமாகிவிட்டது. தமிழர்களைவெறுத்துஒதுக்கியஇந்தியாஇலங்கையுடன் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் இரட்டைவேடத்தை எடுத்துக்காட்டுகின்றது.

வடக்கு முதலமைச்சரைச்சமாளித்து அனுப்புவதற்காக இந்தியத் தூதுவர் கூறிய கருத்துக்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. அவரது கருத்துக்கள் தெற்கு ஆசியாவில்தன்னையொருவல்லரசாகப்பாவனைசெய்துவரும் இந்தியாவின் பலவீனத்தைச் சுட்டிக்காட்டுவதாகவே உள்ளது.

இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது இந்தியத் தமிழர்களுக்குச் செய்த துரோகத்தை எளிதில் மறந்துவிடமுடியாது. இதைஇந்தியாவுக்குத்தூபம்காட்டிக் கொண்டிருப்பவர்கள் உணர்ந்தால் அதுவே போதுமானது.

“ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாதென இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கூறியுள்ளமை ஏற்கத்தக்கதல்ல. இலங்கையில் இந்தியா மூக்கை நுழைத்ததன் காரணமாகவே இங்குள்ள தமிழர்கள் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. இறுதிப் போரில் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படுவதற்கும் இந்தியாவே காரணமாகிவிட்டது. தமிழர்களை வெறுத்து ஒதுக்கிய இந்தியா இலங்கையுடன் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் இரட்டைவேடத்தை எடுத்துக்காட்டுகின்றது.”

## ஆசிரியருக்கான கடிதம்

# நாட்டின் அரசியல்வாதிகளுக்கு அரசியல் நாகரீகம் அவசியம்

கோபமும் கவலையும் ஒரு சேர வரும்போது அழுகை பீறிட்டுக்கொண்டுவரும். இதை என் அனுபவத்தில் பலமுறை உணர்ந்துள்ளேன். அப்படி ஒரு நிலைதான் எமது அரச தலைவருக்கு ஏற்பட்டுள்ளதாகக்கருதுகிறேன். எனினும்தமது அழுகையை வெளியில் காட்டிக்கொள்ளாது உள்ளுக்குள் அவர் மனம் வெதும்பியிருக்கக் கூடும்.

உண்மையில் இன்றைய அரச தலைவர் மைத்திரிபாலவின் நேர்மை, எளிமை, துணிச்சல், மக்கள் நலன்சார்ந்த பலமுடிவுகள் எனப் பல குணாதிசயங்கள் மதிக்கத்தக்கவை. மத்தியவங்கி பிணைமுறி ஊழல் விவகாரம் அவருக்கு வந்த சத்திய சோதனைதான். எவரை உத்தமர்கள் என்று அவர் நம்பியிருந்தாரோ, அவர்களே அரச தலைவரதுநடுநிலை-நேர்மைத்தன்மைக்குசவாலாக அமைந்துவிட்டமை காலத்தின் கோலமே. அரச தலைவரது தலைமைத்துவம் இன்று எல்லோருக்கும் ஒவ்வாமையாகிவிட்டது போலும். தவிரவும் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி ஒருவரது நற்பெயருக்குக் களங்கம் கற்பிப்பது வேதனைக்குரியது. எதிரிகளையும், தவறான போக்குடைய தலைவர்களையும் நாகரிகமான வார்த்தைகளில் விமர்சித்த பல கண்ணியமான அரசியல்தலைவர்கள் இலங்கையின் வரலாற்றில் இருந்திருக்கிறார்கள். அப்படி விமர்சனங்கள் உருவாகும் போது தவறிழைத்தவர்களும் திருந்த வாய்ப்புள்ளதல்லவா? அதைவிடுத்து மற்றவர் மனதைப் புண்படுத்தும் விதத்திலான வார்த்தைப் பயன்பாடுகள் அரசியல் நாகரிகம் தெரிந்துள்ள எமது நாட்டுத் தலைமைகளுக்கு அழகல்ல. நாடாளுமன்றில் அண்மையில் நடந்த அசம்பாவித நாகரீகமற்ற நடவடிக்கைகள், வார்த்தைப்பிரயோகங்கள் நாட்டின் நற்பெயரையே பாதிக்கும் வண்ணம் உள்ளன. முன்மாதிரியான தலைவர்கள் இப்படிப்பேசினால், தமக்குள் அடிபிடிப்பட்டுக்கொண்டால் கட்சித் தொண்டர்களும் மாணவர்களும் அவற்றைப் பின்பற்றியே நடக்கத் துணிவர். அண்மைய யாழ். பல்கலைக்கழக மாணவர் மத்தியிலான மோதல் இதற்குப் பொருத்தமான உதாரணம். வெள்ளை வேட்டி சட்டை அரசியல்வாதிகள் முதல் வெள்ளைச் சட்டை மாணவர்கள் வரை வன்முறைக் கலாசாரத்தைக்கைவிட்டு உலகோர் மத்தியில் நாட்டின் பெயரை தலைநிமிரச் செய்ய முன்வரவேண்டும்.

எனவே இன்றைய அரச தலைவர் போன்ற நல்ல தலைமைத்துவம் தற்போதைய நிலையில் காலத்தின் தேவை. ஒருசிலரின் அரசியல்-பொருளாதார நோக்கங்களுக்காக மற்றொருவரை ஏளனப்படுத்துவதோ, அவமதிப்பதோ எமது எதிர்கால சந்ததிக்கு ஏற்புடையதல்ல என்பதை எமது அரசியல் தலைவர்கள் உணரல் வேண்டும்.

நா. துஷாந். வரணி.

# சவூதியின் நர்ஜானில் ஹௌதி தாக்குதல்

ரியாத். ஜன. 22
சவூதி அரேபியாவின் நர்ஜான் மாகாணத்தில் சவூதி அரேபியாநேற்றுமுன்தினம்ஏவுகணைத்தாக்குதலைநடத்தியது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

ஏமன் நாட்டு அதிபர் அலி அப்துல்லா சால்வின் ஆட்சிக்கு முடிவு கட்டும் வகையில் அந்த நாட்டிலுள்ள ஹௌதி இன மக்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஹௌதி ஆயுதக் குழுவுக்கு எதிராக சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையும் வான்வெளித் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.


இந்தநிலையில்சவூதியின்நர்ஜான்மாகாணத்தை நோக்கி ஹௌதி நேற்றுமுன்தினம் வான் தாக்குதலை நடத்தியது என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. (ம)



# 830 மீற்றர் உயரமுள்ள விண்கல் அடுத்த மாதம் பூமியைக் கடக்கும்

வொஷிங்டன். ஜன. 22
830மீற்றர்உயரமுள்ளவிண்கல்அடுத்தமாதம்பூமியைக் கடந்து செல்லும் என்று அமெரிக்காவின் நாசா மையம் எச்சரித்துள்ளது.

மிகவும் சிறியதான இந்த விண்கல்லுக்கு 2002 ஏஜே.129 என பெயரிடப்பட்டுள்ளது. பூமிக்கு அருகில் வந்து கொண்டிருக்கும்இந்தவிண்கல்மிகவும்அபாயகரமானதுஎன'நாசா' கூறியுள்ளது. இந்த விண்கல் பூமியைத் தாக்கினால் அதில் இருந்துவெளியாகும்மண்துகள்கள்நீண்டகாலஅடிப்படையில் பூமியில் தாக்கம் செலுத்தும் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)





# தென்சீன கடற்பரப்பில் அமெரிக்க போர்க்கப்பல்

வொஷிங்டன், ஜன. 22
சர்ச்சைக்குரியதென்சீனக்கடல் பரப்பில், அமெரிக்கப் போர்க் கப்பல்சர்ச்சைக்குரியவிதத்தில சென்றுள்ளமைபரபரப்பைஏற் படுத்தியுள்ளது.

தென்சீனக்கடல்பரப்பைசீனா, தைவான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் உள்ளிட்ட பல நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன. சீனா சற்று கூடுதல் கரிசணைகாட்டியது. இதனால் பன்னாட்டுதீர்ப்பாயத்தில்சீனாவுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் வழக்குத் தொடர்ந்தது. அதில் தென்சீனக் கடல்பரப்பில் சீனாவுக்கு உரிமையில்லை என்று முடிவாகியது. இதற்கு சீனா எதிர்ப்புத்தெரிவித்துகுறித்தபகுதியில் தொடர்ந்தும் தனது இராணுவநடவடிக்கைகளைநடத்தி வருகிறது. சீனாவின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தென்சீனக் கடல்பரப்பு பொதுப் போக்குவரத்துக்கு உடைய பாதை. அவற்றில் சீனா தனது ஆதிக்கத்தைநிலைநாட்டுவதை ஏற்க முடியாது என்பது அமெரிக்காவின் கருத்தாக அமைந்தது.

சீனாவின் ஆக்கிரமிப்பிற்கு சவால் விடும் வகையில் அமெரிக்காவின் ஜான் எஸ். மெக்கெய்ன்என்றபோர்கப்பல்தென் சீன கடற்பகுதியில் அமைந்துள்ள சீனாவின் செயற்கை தீவுக்கு அருகே நேற்று நெருங்கிச்சென்றுசர்ச்சையைஏற்படுத்தியுள்ளது. (ம)

# பிலிப்பைன்ஸ்நாட்டவர்கள் குவைத் செல்வதற்கு தடை



மணிலா. ஜன. 22
குவைத்தில் தனது நாட்டு தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுவதாக குற்றம் சாட்டியுள்ள பிலிப்பைன்ஸ், அந்தநாட்டுக்குவேலைக்குச் செல்ல மக்களுக்குத் தடை விதித்துள்ளது.

தென்கிழக்குஆசியநாடானபிலிப்பைன்சில் இருந்து 23 லட்சம் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் தொழிலாளர்களாக பணியாற்றி வருகின்றனர்.

குறிப்பாக வளைகுடா நாடான குவைத்தில் 2.5 லட்சம் தொழிலாளர்கள் உள்ளனர். அங்குவேலையில்இருக்கும்பிலிப்பைன்ஸ் பெண்கள்பாலியல்துர்நடத்தைக்குஉட்படுத்தப்படுகின்றனர்என்றுதெரிவிக்கப்படுகிறது. இது போன்ற முறைப்பாடுகள் அதிகளவில் எழுந்துள்ளநிலையில்,குவைத்துக்குவேலைக்காகச்செல்லதனதுகுடிமக்களுக்குதற்காலிக தடைவிதித்துபிலிப்பைன்ஸ்அதிபர்டுடேர்தே உத்தரவிட்டுள்ளார். (ம)

# பீஜிங்கில் அமைக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய வானூர்தி நிலையம்

பீஜிங், ஜன. 22
சீனாவின்பீஜிங்நகரில்கட்டப்பட்டுள்ளமிகப் பெரிய வானூர்தி நிலையத்தின் படங்கள் பன்னாட்டு ஊடகங்களால் வெளியிடப்பட்டுள்ளன.

சீனஅர்சுபீஜிங்நகரில்புதியவானூர்திநிலையத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. வானூர்தி நிலையத்தின் பணிகள் முடிவடைந்ததை தொடர்ந்து 2019ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கு வரும் எனக் கூறப்படுகிறது. இந்த நிலையில் வானூர்தி நிலையத்தின் ஒளிப்படங்கள்இணையத்தளங்களில்வைரலாகப் பரவி வருகின்றன. இந்த வானூர்தி நிலையம் விண்வெளித்தளம் போன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)






பாப்பரசர்பிரான்சிஸ்தென்னமரிக்கநாடுகளான சிலி மற்றும்பெருவுக்கு சுற்றுப்பயணம்மேற்கொண்டுள்ளார். நேற்றுமுன்தினம் பெருவுக்குச் சென்ற அவர் அங்கு மக்கள் சந்திப்பையும் நடத்தினார். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ்வெளியிட்டது. (ம)

## உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு,
advt@uthayan.com,
021 493 1111

### காணி விற்பனைக்கு

நக்கா வீதி, நக்கா Lane சந்திக்கு அருகில் (தெற்குப் பக்கத்தில்) 1 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(CS/13098)

076 872 8556 (Kanthan)

## வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அறிவித்தல்

வட மாகாண போக்குவரத்து அமைச்சினால் அதிவிசேஷ வர்த்தகமானியில் 15.05.2017 இல் வெளியிட்ட 2019/5 இலக்க ஒழுங்கு விதிக்கமைய தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழியனுமதிப்பத்திரம் பெற்று வட மாகாணத்தினுள் தற்போது சேவையாற்றிவருகின்ற உரிமையாளர்கள் வழியனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளவதற்கான விண்ணப்பப்படிவங்களை வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை மாவட்ட அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்வதுடன் தேவையான ஆவணங்களுடன் பூரணப்படுத்தி மாவட்ட அலுவலங்களில் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகின்றேன்.

மற்றும் வடமாகாணத்தினுள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழியனுமதிப்பத்திரத்திம் வலுவிழந்து இரண்டு வருடங்களுக்கு உட்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுடன் 25.03.2018 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். அதன் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.

**வ.பத்மநாதன்**
**பொதுமுகாமையாளர்,**
**வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,**
**வ்டமாகாணம்.**

(in.5587) (13.17)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

### மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- ***கேக் ஐசிங்*** - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- ***உணவு தயாரித்தல்*** - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS ***(முக அழகுக்கலை)*** Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- ***கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*** 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS ***(மணப்பெண் அலங்காரங்கள்)*** இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- ***பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார்,*** மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

**பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!**

**கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு பிரிவுகள் 31-01-2018 புதன்கிழமை (தைப்பூச நாளில்) ஆரம்பமகின்றது**
**நேரம் 10.00மணி**

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

Guru

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

## விலைமனு கேள்விக்கான அழைப்பு
## வாகன சுத்திகரிப்பு சேவை - 2018/ 2019

யாழ்ப்பாணம் பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமை வாய்ந்த வாகன சுத்திகரிப்பு நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது

**1. யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வாகனங்களுக்கான சுத்திகரிப்பு சேவை**

| பெறுகை இல (1) | வாகன விவரம் (2) |
|---|---|
| RDHS/VS/ 2018/01 | பாரவூர்தி (5), பேருந்து (4), நோயாளர் காவு வண்டி (31), சிற்றூர்தி (6), பிக்கப் (21), முச்சக்கரவண்டி (03), பட்டா (2) ஜீப் (3), கார் (1) |

வாகன சுத்திகரிப்பு சேவைக்கு மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 1,000/- உம் உத்தரவாத முறி ரூபா 10,000/- உம் செலுத்தப்பட வேண்டும்.

01. விலைக்கேள்விதாரர் மேற்படி சேவைகளுக்கான ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.

தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினை அலுவலக நேரங்களில் **இல. 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம் :- **021 222 2278 / 021 222 6253** மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

02. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid document" என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய குறிப்பிட்ட தொகையை காசாகச் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 23.01.2018 தொடக்கம் 15.02.2018 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த ) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

03) விலைக்கேள்விகள் 16.02.2018 ஆம் திகதி 10 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி அறையில் உடனடியாக மனுதாரர்கள் முன்னிலையில் கேள்வி மனுக்கள் திறக்கப்படும். ஆர்வமுள்ள மனுதாரர்கள் இதில் தவறாது கலந்துகொள்ளவும்.


04) கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குப் பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**

(IN/5591)(11.17)

## மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
### (கார்க்கார மணியம்)



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (கார்க்கார மணியம்) நேற்று (21.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, விசாலாட்சி, நடராசா (முன்னாள் கிராம அலுவலர்), குமார சாமி ஆகியோரின் அன்புச் சகோதர ரும், காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் கதிர்காமநாதன் (சுன்னாகம் - ப.நோ.கூ.சங்கம்), வளர்மதி, சிவகுமாரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறேமாவதி, சிவானந்தம், டயானி (தயா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஏழாலை மேற்கு,**
**ஏழாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

077 843 9796

(cs. 13131) (13.17)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

## அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

## University Admissions For the Academic Year 2017/2018

B.Sc. (Special) Degree in Sports Sciences & Management
(Sabaragamuwa University of Sri Lanka and
University of Sri Jayewardenepura
B.Sc.(Special) Degree in Physical Education
(Sabaragamuwa University of Sri Lanka)

மேற்குறிப்பிட்ட பட்டப்படிப்புக்குரிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான உளசார்பு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதிகாண் தகைமைகள், விண்ணப்பபடிவங்கள் மற்றும்மேலதிக தகவல்களை பெறுவதற்கு கீழ் குறிப்பிட்ட இணையத்தள முகவரிகளிற் சென்று பார்க்கவும்.

www.sab.ac.lk- இலங்கை சப்ரகமுவ பல்கலைகழகம்
www.sjp.ac.lk- ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

விண்ணப்பங்களை பூரணப்படுத்தல் மற்றும் கையளித்தல் சம்பந்தமான விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையத்தள முகவரிகளிற் சென்று பெற்றுக்கொள்ளலாம். சமர்பிக்கப்படவேண்டிய மேலதிக ஆவணங்கள் சம்பந்தமான விடயங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

BSc (Special) Degree Programme in Physical Education மற்றும் BSc (Special) Degree Programme in Sport Sciences and Management **ஆகிய இரண்டு** பட்டப்படிப்புகளுக்கும் **விண்ணபிக்க விரும்பும் மாணவர்கள் கட்டாயமாக உளசார்பு பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப படிவங்கள் கட்டாயமாக சப்ரகமுவ பல்கலைகழக வலைத்தளத்திலிருந்து மட்டுமே** தர விறக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

எந்த ஒரு விண்ணப்பதாரியும் இரண்டு பட்டப்படிப்புக்கும் விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பதாரிகள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்கு மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

BSc (Special) Degree Programme in Sport Sciences and Management பட்டப்படிப்பிற்கு மட்டும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கோ அல்லது ஸ்ரீஜெயவர்த்தன புரப் பல்கலைக்கழகத்திற்கோ அனுப்பி வைக்கலாம். மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்தலில் இது எந்தவொரு தாக்கதையும் செலுத்தாது.

முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 09th Feberuary 2018 இற்கு முன்பு கிடைக்கப் பெறுமாறு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**உளச்சார்பு பரீட்சைக்கான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது**

| எழுத்துப்பரீட்சை | | |
|---|---|---|
| பட்டம் | திகதி | நேரம் |
| BSc (Special) Degree in Physical Education | 15.03.2018 | 09:30 a.m. – 11:00 a.m. |
| BSc (Special) Degree in Sport Sciences and Management | 15.03.2018 | 11:30 a.m. – 01:00 p.m. |


| பயிற்சிப் பரீட்சை (இரண்டு பட்டக்கற்கை நெறிகளினதும்) | |
|---|---|
| திகதி | நேரம் |
| 15.03.2018 | 01.00 p.m. - 06.00 p.m. |
| 16.03.2018 | 08.00 a.m. - 06.00 p.m. |
| 17.03.2018 | 08.00 a.m. - 06.00 p.m. |

பதிவாளர்,
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

பதிவாளர்,
ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைகழகம்

(13.17)

## கண்ணீர் அஞ்சலி



## சிரந்த விராஜ் கூரே

வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ றெஜினோல்ட் கூரே அவர்களின் சகோதரர் சிரந்த விராஜ் கூரே அவர்கள் காலமானார். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் ஆளுநரின் துயரத்தில் வடமாகாண தமிழ் மக்களாகிய நாமும் பங்கு கொள்கின்றோம்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு Gurugedara, Kapugedara Road, Uggalboda, Kalutara North என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது.

**வடமாகாண மக்கள் சார்பாக**
**எஸ்.முரளி**

**077 300 0967, 076 823 5343**

(CS/13136)(11.17)

## மரண அறிவித்தல்கள்



## கந்தசாமி காசிராஜா
### (சக்கரையண்ணா)

சுன்னாகத்தைப்பிறப்பிடமாகவும், நல்லூர் சங்கிலியன் வீதியைவசிப்பிடமாகவும்கொண்ட கந்தசாமி காசிராஜா நேற்று (21.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளிப்பிள்ளை (நீர்வேலி) தம்பதிகளின் அன்பு மருமகனும், கபிலன், ரவி, நந்தினி, ரகு ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாறஜனி, ராஜி, சந்திரமோகன், உதயா ஆகியோரின் அன்பு மாமனாரும், தருமராஜா, மனோறஞ்சிதம் ஆகியோரின் அன்பு சகோதரரும், கனகலிங்கம் - நீலாம்பிகை (வேலணை), கிருஸ்ணபிள்ளை - பரமேஸ்வரி (பருத்தித்துறை), சின்னத்தம்பி - அன்னலட்சுமி (தாவடி), தியாகராஜா - சிவயோகம் (காரைநகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், டிரூபன், கிசாந், பிறித்தன், சஸ்கியா, பாபியான், பிரபன், பிரணவி, கஜனி, யுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (22.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**69, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.**

(CS/13133)(11.17)

**தகவல்**
**கபிலன் (மகன்)**

**077 4174604, 021 222 6557**



## திருமதி சிவபூரணம் மனோகரன்

எழுதுமட்டுவாழ் விழுபளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபூரணம் மனோகரன் 20.01.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோகரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசமணி தம்பதியரின் புதல்வியும், சிவகரனின் அன்புத் தாயும், ஜெயபாரதியின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான இராசையா தம்பதியரின் மருமகளும், நடராசா, அன்னபாக்கியம், இராஜேஸ்வரி, மகேஸ்வரி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதாகரன் அவர்களின் சிறிய தாயும், உதயணன், யாழேந்திரன் ஆகியோரின் பெரிய தாயும், விஜிதா, பார்த்தீபன் ஆகியோரின் மாமியும், அஞ்சலினா, சியான் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விழுபளை,**
**எழுதுமட்டுவாழ்.**

(CS. 13135) (13.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

75 ஆம் ஆண்டினைப் பூர்த்தி செய்யும் மு/தண்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை வாழ்த்துவதோடு இன்னும் பல புத்தி ஜீவிகளை எமது சமூகத்துக்குப் படைக்க வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழிய! வாழிய! வாழியவே

அப்புக்குட்டி குடும்பம்,
கரடிப்புலவு, தண்டுவான்.

## ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி கோயில் (சிவன்கோயில்) உரிமையாளர்களின் பொதுக்கூட்டம்

காலம் : 2018.02.04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 04.00 மணி
இடம் : ஆலய அன்னதான மண்டபம்
தலைமை : திரு.அ.தில்லைநாதன் அவர்கள் (தர்மகர்த்தாசபை தலைவர்)
விடயம் : தர்மகர்த்தா சபையில் ஏற்பட்டுள்ள வெற்றிடத் தெரிவும், வேறு விடயங்களும்.

தயவுசெய்து உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அ.தில்லைநாதன்
தலைவர்

தர்மகர்த்தா சபை
நடராஜ இராமலிங்க சுவாமி கோயில்
(சிவன் கோயில்) ஆவரங்கால்)

நீ.மயில்வாகனம்
செயலாளர்

(es.31829) (13.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 . 08 . 1926
மறைவு 01 . 02 . 2017

### வீரிப்பிள்ளை கனகரெத்தினம்

இமைகள் மூடித்திறப்பதற்குள் வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில் உங்கள் நினைவுகள்
எம்முடன் என்றென்றும்
வாழும்..... வாழும்..... வாழும்......

398/7, நொத்தாரிசுலேன்,
அரியாலை.

AJA1 9105-13.17

## இருபதாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09.05.1939
மறைவு 02.02.1998
திதி 22.01.2018

அளவெட்டியைச் சேர்ந்த

### அமரர் கணபதிப்பிள்ளை ஜெகதீசன்

(கட்டட ஒப்பந்தகாரர், முன்னாள் தலைவர், அளவெட்டி, மல்லாகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

அப்பா! இருபது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டகலாது
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

வைத்தியசாலை பின் வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(CS.43081)(01.17)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி
ஆங்கிலத்துறை விரிவுரையாளர்
**பாலசிங்கம் முரளீதரன்**
அவர்களின் அன்பு மாமனார்


### சிற்றம்பலம் குமாரசாமி

(ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரியர் - யா/ வீரசிங்கம் ம.வி)
அவர்கள் 18.01.2018 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம்.**

(es.13132) (13.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17.05.1936
இறப்பு 03.02.2017
திதி:- ஷஷ்டி

### சின்னத்தம்பி ஆறுமுகம் (அடக்கம்)

நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள் – எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாச தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்

மட்டுவில் வடக்கு,
முடக்கடி,
சாவகச்சேரி.


என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 539 5560

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி சிவபாக்கியம் செல்லத்துரை

மலர்வு 12 . 10 . 1942
உதிர்வு 25 . 01 . 2015





திதி: ஷஷ்டி

அன்பு எனும்தேன் கலந்து
ஆறிரண்டைப் பெற்றெடுத்து
இல் வாழ்வில் மகிழ்ந்தீர்
எமை அரவணைத்து
ஈகை எனும் பொருளை
அயலவர்க்கும் கொடுத்து
உவகையுற்றீர் உம்மிடத்து
ஊன் உறக்கமின்றி எமை வளர்த்து
எமனிடமும் வாதாடி பாஸ்கரனை விடுத்து
ஏதிலியாய் மூரசுமோட்டையில் வாழ்ந்து
ஐயம் கொள்ளேல் எனக்கூறி பரிதவித்து
ஒற்றுமையை வலியுறுத்தி வையகத்து
ஓலையில் பெயர்வைத்தீர் உமைக்காத்து
ஔவையார் செந்திறன் அனைவரும் பெறுமிடத்து
ஃ எனும் பொருளை பிள்ளைகளுக்கு கொடுத்து
வழிகாட்டினீர் செல்லத்துரை எனக்கு
உங்கள் மூன்றாம் ஆண்டு நினைவில்
எமது உள்ளங்களில்
ஊசலாடும் சிவ சிவ எனும் பாக்கியத்துடன்
என்றும் இன்புற்று வாழ்வோம் உங்களுடன்....

குடும்பத்தினர்.
ஐயா கடையடி, மீசாலை.

## காணி விற்பனைக்கு

நாவற்குழி சந்தியிலிருந்து கேரதீவு வீதியில் புகையிரதக் கடவைக்கு பின் 10 பரப்பு மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-076 914 9742


ES Printers

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்



021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111



அச்சுவேலி

# திருவருள்மிகு தீர்த்தாங்குள பிள்ளையார் திருக்கோயில்

# சம்புரோக்ஷண பஞ்சகுண்டபக்ஷ அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக பெருவிழா - 22.01.2018

கும்பாபிஷேக பிரதமகுரு
"ஆகம கிரியா ஜோதி", "பதி பசு பாசகர்"
"சைவாகமபூஷணம்", "தேசமானிய"
**சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக்குருக்கள்**
(பிரதம குரு, அரசடிப்பிள்ளையார் ஆலயம், நாயன்மார்கட்டு)

## கும்பாபிஷேக பிரதம குருவின் அருள் ஆசியுரை



பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை நிகழ்கின்ற கும்பாபிஷேக ஆகம பூர்வமான கிரியை நிகழ்வுகள் கடந்த 18.01.2018 ஆம் திகதி யிலிருந்து ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று இன்றைய நாளிலே தீர்த்தாங்குளப் பிள்ளையார் கும்பாபிஷேகப் பெருவிழா கண்டுகொள் கின்றார். இன்ன நாளிலே இன்ன கருமங்கள் இன்னாரினால் நிகழ வேண்டுமென்பது இறை நியதி. அந்த வகையிலே இவ்வருடம் நடைபெறுகின்ற கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கு எம்பெருமான் அடியேனை பிரதம குருவாக எண்பித்து அடியேனின் கரங்களால் இப்புண்ணிய கிரி யைகளைச் செய்கின்ற பெரும்பேறை வழங்கியமையையிட்டு என் வாழ்நாளின் பெரும்பயனை அடைகின்றேன். கடந்த இரண்டு கும்பாபிஷேகங்களிலும் சர்வ சாதகா சிரியராகவும் சர்வபோதகாசிரியராகவும் கலந்துகொண்டதன் பயனாக அடியேனுக்கு இப்பெரும்பேறு கிட்டியுள்ளதென்றால் மிகையாகாது. நடைபெற்று முடிந்த திருப்பணிக ளுக்குப் பல கோடி ரூபாய்களை சேகரித்து பெரும்பணிகளை நிறைவேற்றிய ஆதீன-கர்த்தாக்களுக்கு எம்பெருமான் அருள் கிடைக்க பிரார்த்திப்பதோடு இப்பெருந்தொகை நிதியை வழங்கிய எம்பெருமான் மீளா அடியவர்களுக்கு அருள்பாலித்து தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற சான்றோரின் வாக்குக்கமைய கடந்த வருடங்களில் ஏற்பட்ட அனைத்து துன்பங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி சகல சௌபாக்கியங் களும் கிட்ட எம்பெருமானைப் பிரார்த்தித்து அருளாசி கூறி நிற்கின்றேன்.

"சர்வேஜனாக சுகினோ பவந்து"

**ஆகம கிரிஜாஜோதி, பதி பசு பாசகர்**
**சிவஸ்ரீ சதாமகாலிங்கசிவக்குருக்கள்**
**(செயலாளர் அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர்சபை)**

## ஆசிச்செய்தி



அச்சுவேலி திருவருள்மிகு தீர்த்தாங்குள பிள்ளையார் திருக்கோயிலின் சம்பு-ரோகண பஞ்சகுண்ட அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று 22.01.2018 திங்கட்கிழமை இனிதே நடந்தேற எம்பெருமான் திருவருள் பாலி-த்துள்ளார். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழிக் கமைவாக ஆலயங்களை அமைத்து காலந்தவறாத பூசைகள், ஆராதனைகள் நடத்தி சைவ விழுமியங்களைக் கைக் கொண்டு ஒழுகுகின்ற இம்மக்கள் இந்த சிறப்பான விழாவிலே பங்கு கொண்டு இஷ்ட சித்தி களைப் பெற்று உய்தி பெற வேண்டுமெனப் எம்பெருமானைப் பிரார்த்-தித்து ஆசி கூறுகின் றேன்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு "

**ஆதீனகுரு முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
**நல்லை ஆதீனம்.**

## "சிவ ஸ்ரீபிரகாஷ் ஐயாவின் உள்ளத்திலிருந்து



எம் தாய் நாடாம் இலங்காபுரியின் வடபால் சைவமும் தமிழும் விவசாயமும் தழைத்தோங்குகின்ற யாழ்ப்பாண அச்சுவேலிப் பதி யில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற எம்குல விநாயகரின் மகாகும்பா பிஷேகம் இன்றைய நன்நாளிலே செழுமையுற நடைபெறுவதை யிட்டு உவகையடைகின்றேன். ஊர்கூடி தேர் இழுத்து ஒற்றுமையை வெளிப்படுத்துவது போன்று இக்கிராம மக்கள் அனைவரும் விநா யகப் பெருமா னின் மீது கொண்டுள்ள பக்தியின் வெளிப்பாடே இன்றை தீர்த்தாங்குளப் பிள்ளையாரின் ஆலயம் கலை நயங்களுடன் கூடிய கலைக்கோயிலாக மிளிர்கின்றது. இக்காட்சியை நேரலையாகக் கண்ணுற்று பெரும் மனநிறைவு கொள்கிறேன். இப்பதி யிலே எனது திருமண பந்தத்தினூடாக எம்பெருமானுடன் என்னை இணைத்தது எம்-குலதெய்வமாம் அன்னை வீரமாகாளியின் திருவருளே. இப்பெருந்திருப்பணிக்கு பெருநி தியைச் சேகரித்து திருப்பணியை நிறைவேற்றிய முதல்நிலை ஆதீனகர்த்தாவாகிய சிவத்திரு சோ.ஜெயந்திநாதன் ஐயாவின் மருமகன் என்று கூறுவதில் பெருமிதமடைகி றேன். இப்புண்ணிய கைங்கரியத்தில் பங்காற்றிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"என்றும் இன்ப அன்பு வேண்டும்"

**சிவத்திரு சிவ ஸ்ரீபிரகாஸ்ஐயா**
(கனடா வாழ் ஆதீனகர்த்தா, வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் தேவஸ்தானம்)

ஆலய குருமார்கள்
**சிவத்திரு சோ. ஸ்ரீஜெயந்திநாதன் ஐயா**
**சிவத்திரு சோ. ஸ்ரீயோகநாதன் ஐயா**
**(மேற்படி தேவஸ்தான முதல் நிலை ஆதீன கர்த்தாக்கள்)**

## முதல் நிலை ஆதீன கர்த்தாக்களின் உள்ளத்தில் இருந்து...





அச்சுவேலி மாநகரின் தீர்த்தாங்குள பதியில் சைவக்-குருமார்களின் குலதெய்வமாக இருந்து வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை யெல்லாம் வழங்கி அருள்பாலித்-துக் கொண்டிருக்கின்ற தீர்த்தாங்குளப் பிள்ளையாரின் மஹாகும்பாபிஷேக பெருவிழா இன்றைய நாளில் நடை-பெறுவதையிட்டு பெரும் மனமகிழ்வுறுகின்றோம். இப்புண்ணிய பணிக்கு பொருள், பண உதவிகளை வழங்கிய அனைத்து நல் உள்ளங்களையும் இத்தருணத்தில் வாஞ்சையுடன் நன்றி பகிர்ந்து கொள்கின்றோம். இத்திருப்பணிகளை செய்விக்கின்ற பெரும்பாக்கியத்தை எம் பெருமான் எமக்களித்திருக்கின்றார். எமது வாழ் நாளிலே நாம் செய்த பாக்கியம் எம் பெருமானின் மூன்றாவது கும்பாபிஷேகத்தை கண்டு கொள் கின்றோம். எமது முன்னோர்கள் எம் பெருமானுக்கு கள்ளம் கபடமில்லாமலும் அனைவரையும் மரியாதையுடன் நடத்தி திருத்தொண்டுகள் புரிந்ததன் பெரும் பயனே எமக்கு இவ்வாறான பாக்கியத்தை நல்கியது என்றால் மிகையாகாது. எமது சகோ-தரனே இக் கும்பாபிஷேக பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பது எம் பெருமான் எம் குடும்பத்திற்க் அளித்த நல்வரமாகும். இக் கும்பாபிஷேகத்தின் பெரும் பயன்களை எல்லாம் எம் கிராம மக்களுக்கு எம் பெருமான் வழங்கி எம் கிராம மக்களின் வாழ்வு செழிப்புற வேண்டுமென்று இத்தருணத்தில் பிரார்த்தித்துக் கொள்கின்றோம். இப்பு-ண்ணிய பணிக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பணத்தை எமது கையில் வழங் கிய உறவுகளுக்கும் கிராமமக்களுக்கும் இத்திருப்பணிகளை நடத்தி வித்தவர்கள் என்ற வகையில் மீண்டும் ஒரு முறை வாஞ்சையுடன் கூடிய நன்றியை பகிர்கின்றோம்.

தீர்த்தாங்குளப் பிள்ளையார் மனமகிழ்ந்து எல்லோரும் இன்புற்று வாழ பிரார்த்தனை செய்து கொள்கின்றோம்.

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

**சிவத்திரு. சோ. ஸ்ரீ ஜெயந்திநாதன் ஐயா**
**சிவத்திரு.சோ. ஸ்ரீ யோகநாதன் ஐயா**
(மேற்படி தேவஸ்தான முதல் நிலை ஆதீனகர்த்தாக்கள்)

## உண்மைத் தொண்டனின் உள்ளத்து வேட்கை




மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்று மூர்த்தி சிறி-தாயினும் கீர்த்தி பெரிது என்ற வாக்கை மெய்ப்பித்து நிற்கும் எம்குல தெய்வமாம் தீர்த்தாங்குள விநாயகரின் கும்பாபிஷேகப் பெரும் சாந்தி மங்கலகரமாக இன்றைய நாளிலே நடைபெறுவதையிட்டு உண்மைத் தொண்டன் என்ற வகையிலே உள்ளம் பூரித்து நிற்கின்றேன். என் பல நாள் மனவேட்கை இன்றைய நாளிலே செயல் வடிவம் பெற்று நிற்கின்றது. இதனூடாக எம்பெருமான் உணர்த்துவது யாதெனின் உள்ளன்போடு எண்ணுகின்ற எண்ணங்கள் செயல்வடிவம் பெறும் என்பது கண்கூடு என் சிறுபராயத்திலிருந்தே எக்காரியம் செய்ய முன்பும் எம்பெருமான் தீர்த்தாங்குள விநாயகரை தரிசிப்பது வழமை. அதனூடாக என் வீட்டின் முன்னே மதவடி விநாயராக எம்பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கி-ன்றான். எம்பெருமானிற்கு புதியதோர் இராஜகோபுரம் அமையப் பெற்று கோபுரதரிசனத் தைக் கண்ணுற்றுக் கொள்ளவேண்டுமென்றும் வெகு விரைவிலே அழகிய சித்திரத் தேரிலே இராஜ அலங்காரத்திலே எம்பெருமான் காட்சி கொடுக்க வேண்டுமென்றும் இப்புண்ணிய நன்னாளிலே எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

எம் பெருமானின் உற்சவகாலங்களிலே இப்பதியிலே வாழ்கின்ற அனைத்து சைவக் குருமார்களும் தமது சகலவிதமான கடமைகளையும் இடைநிறுத்தி எம்பெருமானுக்கு திருத்தொண்டுகள் புரிவதை தமது வாழ்நாள் பலனாக கருதி வாழ்ந்து வருகின்றனர். இந்த அன்பர்களிற்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

" தெளிவே என் சிந்தனை "

**சிவத்திரு. நடராசாஐயா கணேசலிங்கம் ஐயா**
**கண்ணன் ஐயா - அச்சுவேலி.**

இங்ஙனம் :
சிவத்திரு சபாபதி ஐயா சோமசுந்தரம் ஐயா குடும்பத்தினர்,
(மேற்படி தேவஸ்தான பரம்பரை முகாமை ஆதீனகர்த்தா.)




காரைநகர் - பெருநெற்றாழ்வு - ஆலடி

# திருவருள்மிகு ஸ்ரீ வேல்முருகன் தேவஸ்தான நவகுண்ட பக்ஷ நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2018

| | | |
|---|---|---|
| உச்சியின் மகுடம் மின்ன உனிர்தருநுதனிலோடை<br>வச்சிர மருப்பினொற்றை மணி கொள்கிம்புரிவயங்க<br>மெய்ச் செவிக்கவரி தூங்க வேழமாமுகங்கொண்டுற்ற<br>கச்சியின் விகடசக்கர கணபதிக்கு அன்பு செய்குவோம். | உருவாய் அருவாய் உளதாய் இலதாய்<br>மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்<br>கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்<br>குருவாய் வருவாய் அருள்வாய் குகனே! | அன்றலர் கமலம் போன்ற<br>அழகிய வதனி போற்றி<br>அலைகடல் அமுதமாக<br>அவதரித்து எழுந்தாய் போற்றி |

"கந்தன் கணத்தடியார் கையேற்றுக் கற்றுணர்க, முத்தன்பு முற்றுக வேல் முன்பு, குமரகுருபரன் குலமாட் கொள்கவே, நலமே பெருகுக நாடடெல்லாம் வாழ்கவே!

| கிரியாரம்பம் | எண்ணெய்க்காப்பு | மஹாகும்பாபிஷேகம் |
|---|---|---|
| 18.01.2018 வியாழக்கிழமை | 20.01.2018 சனி காலை 9.00 மணிமுதல் 21.01.2018 ஞாயிறு நண்பகல் 12.00 மணிவரை | தைத்திங்கள் 09 ஆம் நாள் (22.01.2018) திங்கட்கிழமை |

**குகநேயச் செல்வர்காள் !** முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன் என்று அருணகிரிநாத சுவாமிகள் கூறுகின்றார். இது எம் சிந்தையைத் தூண்டும் ஒரு சொற்றொடராகும். வள்ளிநாயகி முருகப் பெருமானைக் கிழவன் என்று வைது பின் அவனுடைய மனையாளாகும் பேறு பெற்றார். சூரபத்மன் நெருப்பிலே பிறந்து நீரிலே தவழ்ந்து கார்த்திகைப் பெண்களின் பால் அருந்திய நேற்றைப்பாலன் என்று வைதான். ஈற்றிலே முருகனுக்கு வாகனமாகவும் கொடியாகவும் திகழும் பேறு பெற்றான். முருகப் பெருமானின் பேரருளை இச் செயல்கள் நன்கு காட்டுகின்றன. இத்தகைய சிறப்புகளையுடைய கந்தப் பெருமான் தர்மசிந்தனையாளர்களும், தானசீலர்களும் வாழ்ந்த காரைநகர் எனும் ஊரிலே "பெருநெற்றாழ்வு" ஆலடி என்னும் திவ்விய பதியமர்ந்து அருளாட்சி புரிகின்ற ஆலயமானது "மயன்" என்கின்ற தேவசிற்பியும் வியக்கும் வண்ணம் நிர்மாணம் செய்யப்பட்டு நிகழும் சர்வ மங்கலம்மிகு ஏவிளம்பி சம்வத்ஸரம் உத்தராயணம் ஹேமந்த ருது (முன்பனிக்காலம்) புஷ்ய மீ தைத்திங்கள் 09 ஆம் நாள் (22.01.2018) திங்கட்கிழமையும் சுக்லபக்ஷ பஞ்சமித் திதியும் உத்தரட்டாதி நக்ஷத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 9.39 மணி முதல் 11.01 மணி வரையுள்ள மீன லக்ன சுப முகூர்த்த வேளையில் பெருஞ்சாந்தி எனப்போற்றப்படும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறக் கலியுகவரதனுடைய திருவருளும் "சிவாஹம கிரியாரெத்னம்" கலாநிதி சிவப்பிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார் அவர்களின் குருவருளாக்கையும் கைகூடியுள்ளது. அடியார் பெருமக்கள் கும்பாபிஷேகக் கிரியா காலங்களில் சைவாச்சார சீலர்களாக ஆலயமேகி பக்தியோடு வந்தனம் செய்து இறையருள் இன்பத்தோடு நாம் வாழ்வில் பெற வேண்டிய பதினாறு செல்வப்பேறுகளும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

## சிவாகம பூர்வமான கிரியா காலக்கிரமம்

**தைத்திங்கள் 05 ஆம் நாள் (18.01.2018) வியாழக்கிழமை**

**காலை 10.35 மணி முதல்** கர்மாரம்பம், விக்னேஸ்வர பூஜை, ஆச்சார்ய வர்ணம், பிரதிஷ்டா மஹாசங்கற்பம், சுத்தி புண்ணியாகவாசனம், முகூர்த்தப் பத்திரிகாடனம், தேவப்ராம்மண அனுக்ஞை, மூர்த்தி அனுக்ஞை, தன பூஜை, திரவ்ய சுத்தி, திரவ்ய விபாகம், பேரிதாடனம், மஹா கணபதி ஹோமம், நவக்ரக ஹோமம், ரக்ஷோக்ன ஹோமம், திசா ஹோமம், சாந்தி ஹோமம், சம்கிதா ஹோமம், யந்திரபூஜை, பரத்யக்ஷ கோபூஜை, கோவாசம், ஆதித்யாக்னி சம்கிரஹணம், சங்கம தீர்த்த சமகிரஹணம், குண்ட மண்டல வேதிகா ஸ்தாபனம், உபன்னியாசம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**மாலை 3 மணிமுதல்** விக்னேஸ்வர பூஜை, புண்ணியாக வாசனம், கிராமசாந்தி, பிரவேச பலி, பரமசாயிபத வாஸ்து சாந்தி, ம்ருத் சம்கிரஹணம், அங்குரார்ப்பணம், கௌதுகபந்தனம், மயூரத்தர்மத்வஜாரோஹணம், கடகஸ்தாபனம், கலாகர்ஷணம், மூர்த்தி கும்பங்கள், ஞான யாகசலா, பூர்வத்வாரபிரவேசம், யாக பூஜைகள் (காலம் 1) அக்னிகார்யம், நவாக்னி, விபஜனம், குண்ட பூஜைகள், சுப்ரமண்ய மாலா மந்திர ஹோமம், சகஸ்நராட ஹோமம், சாமான்ய பூர்ணாகுதி, பிரதக்ஷண நமஸ்காரம், விசேட தீபாராதனைகள், வேத ஸ்தோத்திர, ஸ்வஸ்திவாசக திராவிட ஸ்தோத்திர பராயணங்கள் . இரவு 8 மணிமுதல் சுமங்கலிப் பெண்கள், கன்னிப்பெண்கள் கலந்து கொள்ளும் தீபாலக்ஷ்மி வழிபாடு, தீபஸ்தானம், தாபிஸ்தானம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ் தாபனம், அஷ்டபந்தன சமர்ப்பணம், ஆச்சார்ய யஜாமனன், ஸ்தபதி தைலாப்பியங்கம், உபன்னியாசம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**தைத்திங்கள் 06 ஆம் நாள் (19.01.2018) வெள்ளிக்கிழமை**

**காலை 8 மணிமுதல்** விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகவாசனம், விசேஷ சந்தி, பூத சுத்தி, அந்தர்மாத்ருகான்னியாசம், ஆச்சார்ய வீதிப்பிரதகஷிணம், தர்மத்வஜபூஜை, மகமந்திரப்பிரவேசம், பரிவார யாக பூஜைகள், ஹோமங்கள், பிரதான யாக் பூஜை (காலம் 2) அக்னி யஜனம், ஹோமங்கள், சத்ருசம்ஹார திரிசதிநாம ஹோமம், சாமான்ய பூர்ணாகுதி, பிரதக்ஷிண நமஸ்காரம், தீபாராதனைகள், பராயணங்களள், ஸ்கந்த ஷஷ்டி கவச பாராயணம், உபன்னியாசம், திருவருட்பிரசாதம் வழங்கல்.

**மாலை 4 மணி முதல்** விக்னேஸ்வர பூஜை புண்ணியாகவாசனம், சகலீகரணம், பெஹிர் மாத்ருகான்னியாசம், ஆச்சார்ய வீதிப் பிரதகஷிணம், தர்மபத்மபூஜை, மகமந்திரப்பிரவேசம், பரிவாரயாகபூஜைகள், ஹோமங்கள், பிரதானயாகபூஜை (காலம்3) அக்னி யஜனம், ஹோமங்கள், கட்கமாலா ஹோமம், சாமன்ய பூர்ணாகுதி, பிரதக்ஷிண நமஸ்காரம், தீபாராதனைகள், வேத ஸ்தோத்திர, ஸ்வஸ்திகவாசக, திராவிட ஸ்தோத்திர, ஸ்கந்தகுருகவச பாராயணங்கள், உபன்னியாசம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**தைத்திருங்கள் 07 ஆம் நாள் (20.01.2018) சனிக்கிழமை**

**காலை 8 மணிமுதல்** விக்னேஸ்வர பூஜை புண்ணியாவாசனம், ஆச்சார்ய விசேஷ சந்தி, அந்தர்யாகம், ஆச்சார்ய வீதிப் பிரதி ஷிணம், தர்மத்வஜபூஜை, மக மந்திரப்பிரவேசம், பரிவார யாக பூஜைகள், ஹோமம், பிரதான யாக பூஜை (காலம் 4) ஹோமம், மாலா மந்திர ஹோமம், அஷ்டோத்தரசதநாம ஹோமம், சாமான்ய பூர்ணாகுதி, பிரதிகஷிண நமஸ்காரம், தீபாராதனைகள், வேத ஸ்தோத்திர, ஆசீர்வசன, திராவிட ஸ்தோத்திர பாராயணங்கள், கந்தலங்கார பாராயணம், உபன்னியாசம், திருவருட்பிரசாதம் வழங்கல்.

**மாலை 4 மணி முதல்** விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகவாசனம், சகலீகரணம், ஆச்சார்ய வீதிப்பிரதக்ஷிணம், தர்மத்வஜபூஜை, ஞானயாகசாலப்பிரவேசம், பரிவாரயாக பூஜைகள், ஹோமங்கள், பிரதான யாக பூஜை (காலம் 5) ஹோமம், சுப்ரமண்ய மாலா மந்திர ஹோமம், சாமான்யபூர்ணாகுதி, பிரதக்ஷிண நமஸ்காரம், தீபாரராதனைகள், பாராயணங்கள், கந்தரனுபூதி பாராயணம், உபன்னியாசம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**தைத்திங்கள் 08 ஆம் நாள் (21. 01.2018) ஞாயிற்றுக்கிழமை**

காலை 8 மணிமுதல் விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகவாசனம், பூத சுத்தி ஆச்சார்ய வீதிப்பிரதக்ஷிணம், தர்மத்வஜபூஜை, மகமந் திரிப் பிரவேசம், பரிவாரயாக பூஜைகள், ஹோமாங்கல பரிவார யாக விஷேச திரவ்ய ஹோமம், பிரதான யாகபூஜை (காலம் 6) ஹோமங்கள், திரிசதிநாம் ஹோமம், விசேஷ திரவ்ய ஹோமம், சாமான்ய பூர்ணாகுதி, பிரதக்ஷிண நமஸ்காரம், தீபாராதனைகள், பாராயணயங்கள், உபன்னியாசம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**20.01.2018 சனிக்கிழமை காலை 9 மணி முதல் 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி வரை பக்தர்கள் எண் ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும்.**

**மாலை 4 மணி முதல்** விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகவாசனம், விசேஷ பஞ்ச கௌவ்ய பூஜை, பிம்பசுத்தி கும்ப பூஜை, சூக்த பாராணயங்கள், ஜபம், ஆச்சார்ய வீதிப்பிரதக்ஷிணம், தர்மத்வஜபூஜை, மக மந்திரிப் பிரவேசம், பிம்பசுத்தி, பிம்பரக்ஷாபந்தனம், பூர்வசந்தானம், பரிவார பரிவாரயாகபூஜா ஹோமங்கள், பரிவார யாக ஸ்பர்ஸாகுதி, பிரதான யாக பூஜை (காலம் 7) ஹோமங்கள், ஸ்பர்சாகுதி, சாமான்ய பூர்ணாகுதி, பிரதக்ஷிண நமஸ்காரம், தீபாராதனைகள், பாராயணங்கள், ஆச்சார்ய வஸ்திர உத்தரீய உபசார சமர்ப்பணம், உபன்னியாசம், திருவருட் பிரசாதம் வழங்கல்.

**தைத்திங்கள் 09 ஆம் நாள் (22.01.2018) திங்கட்கிழமை**

**காலை 6 மணி முதல்** விக்னேஸ்வர பூஜை புண்ணியாகவாசனம், சகலீகரணம், ஆச்சார்ய வீதிப்பிரக்ஷிணம், ஞானயாகசாலா பூர்வத்வாரப் பிரவேசம், பரிவாபர யாக பூஜை ஹோமங்கள் பரிவார யாக மஹா பூர்ணாகுதிகள், தீபாராதனைகள், பாராயணங்கள், பிரதான யாகபூஜை (காலம் 8) ஹோமங்கள், பூர்வாதி அஷ்ட குண்ட மஹா பூர்ணாகுதி, அக்னி சம்யோஜனம், உபசார ஹோமங்கள் வஸோர்தாரா ஹோமம் மஹா பூர்ணாகுதி தர்ப்பணாகுதி தீபனாகுதி பிரதிக்ஷிண நமஸ்காரம் விசேட தீபாராதனைகள், பாராயணயங்கள், நாத, கீர்த்தனாஞ்சலி, நர்த்தனாஞ்சலி, அந்தர்பலி, பகிர்பலி, யாத்ராதானம், ஸ்தாபி கும்பஉத்தாபனம், விதிப்பிரதகஷிணம், ஸ்தூலலிங்க ஸ்தாபி அபிஷேகம், மூர்த்தி கும்பங்கள் உத்தாபனம், வீதிப்பிரதகஷிணம், பாதப்ரகஷாளனம், புஸ்பாஞ்சலி, மங்கல ஹாரத்தி, ஷட் ஆதார பூஜைகள், மூலாலயப்பிரவேசம், கலாசம்யோஜனம், மஹாகும்பாபிஷேகமம், மஹாஹவிர் நிவேதனம், மதுபர்க்கம், அகண்ட தீபம், தேவபூஜை, ஆச்சார்ய சம்பாவனை, ஆசியுரை, அருளுரை, எஜமான் அபிஷேகம், தசதர்சனம், மஹாபிஷேகம், விசேஷ பூஜைகள், திருவருட்பிரசாதம் வழங்கல், மகேஸ்வரபூஜை (அன்னதானம்).

கும்பாபிஷேகத்தன்று **மாலை 6 மணிக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்று 7 மணியளவில்** விசேஷ வசந்தமண்டபப் பூஜைகள் இடம் பெற்று எம் பெருமான் அழகிய சாத்துப்படியுடன் திருவீதியுலா வரும் காட்சியும் நடைபெறும்.

**மஹாகும்பாபிஷேகக் கிரியைகள் யாவும், இலங்கை இந்துமத முதலாவது குருபீடாதிபதி, சிவாஹம ஞானி, அருள்ஜோதி, ஸகந்த சாம்பசிவ சிவாச்சார்யார் (நாயன்மார்கட்டு) 'சிவாஹமானுசாரித சார்த்தூல்' சிவப்பிரம்மஸ்ரீ சிவ நித்தியானந்தாச்சார்யார் ஆகியோரின் குருவருளாக்கையுடனும் பத்ததிக் கிரமங்களுடனும் சிறப்புற நடைபெறும்.**

### சர்வபோதகாச்சார்யர்கள்

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, ஆன்மீக அருள் ஜோதி, சிவாஹம கலாநிதி
**சிவப்பிரம்மஸ்ரீ ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் (கொழும்பு)**
"சர்வசாதக சக்கரவர்த்தி, சபரிமலை குருஸ்வாமிஜி"
**சிவப்பிரம்மஸ்ரீ சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சார்யார்**
எருமேலி ஸ்ரீ தர்மசாஸ்தா தேவஸ்தானம் - நாயன்மார்கட்டு

### பிரதிஷ்டா பிரதம ஆச்சார்யார்

" சிவாஹம கிரியா பூஷணம்"
**சிவப்பிரம்மஸ்ரீ**
**நித்தியானந்த நித்தியசிவதாண்டவ சிவாச்சார்யார்** (சங்கானை)

### அருளாசி வழங்கும் பஞ்சரெத்ன குருமணிகள்

"வேதாகம ஞானபாஸ்கரன்"
**சிவஸ்ரீ தாணு மஹாதேவக்குருக்கள்** (தர்மசாஸ்தா குருகுலம் - இணுவில்)
**ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**
(வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம் - பொன்னாலை)
**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்**
(ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தானம் - மருதனார்மடம்)
"பிரதிஷ்டா கிரியா சிரோன்மணி"
**சிவப்பிரம்மஸ்ரீ சுந்தரசெந்தில் ராஜக்குருக்கள்**
(ஸ்ரீ துர்க்கா குருகுலம் - தெல்லிப்பழை)
"கிரியா பக்திமணி" **சிவஸ்ரீ சிவா சோமசுந்தரக்குருக்கள்** (சங்கானை)
**சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக்குருக்கள்** (உசன் சந்தசாமி கோயில்)

### நவகுண்ட சோபிதாச்சார்யார்கள்

சிவச்சார்யமணி **சிவஸ்ரீ சிவா பாலசுப்பிரமண்யகுருமணி** (கொழும்பு)
சிவச்சார்யமணி **சிவஸ்ரீ சபா ஸ்ரீ சந்தானக்கமணி** (கோண்டாவில்)
சிவச்சார்யமணி **சிவஸ்ரீ ந.பாலசுப்ரமண்யகுருமணி** (கொக்குவில்)
சிவச்சார்யமணி **சிவஸ்ரீ சி. கிருஸ்ணமூர்த்திக்குருமணி** (அச்செழு)
சிவச்சார்யமணி **சிவஸ்ரீ க. ஜெயராமக்குருமணி** (தம்பாலை)
சிவச்சார்யமணி **சிவஸ்ரீ சி. குககணேசக்குருமணி** (அளவெட்டி)
சிவச்சார்யமணி **சிவஸ்ரீ பால. உதயகாந்தகுருமணி** (நல்லூர்)
சிவச்சார்யமணி **சிவஸ்ரீ அ. பத்மரூபக்குருமணி** (சங்கானை)

### சர்வசாதகாச்சார்யர்கள்

**சிவப்பிரம்மஸ்ரீ நித்திய சிவானந்த சிவாச்சார்யார்** (சங்கானை)
**பிரம்மஸ்ரீ நித்திய சுதானந்த சர்மா** (சங்கானை)

### யாகசம்ரக்ஷகர்கள்

**சிவத்திரு ஸ்ரீ சண்முகானந்தசர்மா** (கரவெட்டி)
**சிவத்திரு த.ஜெகதீஸ்வரன்** (சண்டிலிப்பாய்)
**சிவத்திரு த.பத்மநிருபன்** (சங்கானை)
**சிவத்திரு சி.சிவசங்கர்** (மட்டுவில்)
**சிவத்திரு த.பிரசாந்தன்** (வடலியடைப்பு)

### அருளுரை வழங்குவோர்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பாரமாசார்ய சுவாமிகள்** (நல்லை ஆதீனம்)
**சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்** (ஈவினை, புன்னாலைக்கட்டுவன்)
**பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்ய சுவாமிகள்** (சின்மயா மிஷன்)
**ஆன்மிகச் சுடர் சிஷிதொண்டுநாதன் சுவாமிகள்** (அமெரிக்கா)

### வேதபாராயணம்

சிவாச்சார்யமணி **சிவஸ்ரீ பால.ஸ்கந்தரூபக்குருமணி**
(ஸ்ரீ ஐயப்பமணிகண்டசபை - கந்தர்மடம்)
சிவாச்சார்யமணி **சிவஸ்ரீ இரா.இராமலிங்ககுருமணி**
(ஆசிமட அரசடி விநாயகர் தேவஸ்தானம் - கோண்டாவில்)
சிவாச்சார்யமணி **சிவஸ்ரீ வெங்கட ஸ்படிகலிங்கதருமணி** (சங்கானை)

### சிறப்புரை

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

### விஷேட மங்கலநாதம்

**வீராச்சாமியும் புதல்வர்களும்** (காரைநகர்)
**சிவகுமார் குழுவினரும்** (வழக்கம்பரை)

### நித்தியடி மங்கல வாத்தியம்

**கண்ணன் குழுவினர்** (கீரிமலை வீதி, சித்தன்கேணி)

### ஓதுவார் மூர்த்தி

பண்ணிசைச்செல்வர் **எஸ்.தில்லைமணி** (வட்டுக்கோட்டை)

| ஒளியமைப்பு | ஒலியமைப்பு | புஸ்பாலங்காரம் | வர்ணவேலை | நிர்மாண ஸ்தபதி | யாக இலங்காரம் |
|---|---|---|---|---|---|
| **சக்திவடிவேல் மயூரன்** (நீராவியடி.யாழ்ப்பாணம்) | **மகேஸ்வரன்** (காரைநகர்) | **இ.பரமசாமி** (சண்டிலிப்பாய்) | **குமார் குழுவினர்** (நாச்சிமார் கோயிலடி) | **க.விக்னேஸ்வரன் குழுவினர்.** (அராலி) | **வ.கணேசானந்தன்**(காரைநகர்) |

கும்பாபிஷேகக் கிரியா காலங்களில் அடியவர்கள் சைவாச்சார சீலர்களாக பக்தியோடு பதிவந்து பூஜா கார்யங்களிற்குத் தேவையான சிவத்திரவியங்களைக் கொடுத்து கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாகிய முருகப் பெருமானுடைய திருவருளோடு நாம் வாழ்வில் பெற வேண்டிய பதினாறு செல்வப் பேறுகளும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!


**கிரியா காலங்களில் பண்ணிசைக் கச்சேரிகள் நடைபெறும்.**

*எம்பெருமான் அருள் வழியில்*
**வே.குலானந்தராசாவும் ரதிமலரும்**
**காரைநகர்**

**பெருநெற்றாழ்வு, ஆலடி, காரைநகர்.**

(AJA 13142/15)

# வீழ்வது மேலோங்கி எழுவதற்கே!



ஏ.ஜே.ஞனேந்திரன்

எங்களில் எத்தனைபேரால் நாம் நாமாகவே வாழ்கின்றோம் என்று கூறமுடிகிறது? நாம் மற்றவர்களின் தூற்றுதலுக்கும், வஞ்சனைகளுக்கும் பயந்தவர்களாகவும், பிறரைத் திருப்திப்படுத்தவுமே வாழ்கின்றோம். எங்கள் மீது எங்களுக்கு இருக்கும் அவநம்பிக்கையும், தாழ்வான சுயமதிப்பும் எமது மகிழ்வானதும் வெற்றிகரமானதுமான வாழ்வுக்குப் பிறரில் தங்கியிருக்கச் செய்கிறது. சிறிதளவு வீழ்ச்சி கண்டாலே சிதறுண்டுபோகும் திடமற்ற மனநிலை எம்மைப் பல இடங்களில் பலவீனமுற்றவர்களாக ஆக்குகின்றது.

ஒரு விவசாயியிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. அந்தக் கழுதை ஒருமுறை நீர்வற்றிப் பாழடைந்துபோயிருந்த அவனது தோட்டக் கிணற்றில் தவறி விழுந்துவிட்டது. அதை மீட்டெடுப்பதற்கான செலவு அந்த வயதான கழுதையின் பெறுமதியைவிட அதிகமாக இருந்தது. எப்படி இந்தக் கழுதையைக் கொன்றொழிப்பதென்று எண்ணியிருந்தவிவசாயிக்குஇதுஒருநல்லசந்தர்ப்பமாக அமைந்துவிட்டது. எனவே அயலவர்களின் உதவியுடன் அருகிலிருந்த மண்மேட்டை வெட்டி இந்தக் கிணற்றை கழுதையுடன்சேர்த்துமூடிவிடுவதென்ற முடிவெடுத்தான். மறுநாள் காலை அயலவர்களின் உதவியுடன் மண்மேட்டை வெட்டி கிணற்றினுள்போட்டு மூட ஆரம்பித்தான். கழுதை மீது மண்விழுகின்றபோது அது அலறியடித்துக் கத்தியது சிறிது நேரத்தின் பின்பு கழுதை கத்துவதை நிறுத்திவிட்டது. விவசாயி கழுதை இறந்தவிட்டதாக எண்ணிக் கிணற்றினுள் எட்டிப் பார்த்தான்.

அவனுக்கு வியப்பாக இருந்தது. ஏனெனில் கழுதைமீது இவர்கள் ஒவ்வொருமுறை மண்ணைப் போட்டபொழுதும் அது ஒவ்வொருமுறையும் தனது உடலைச் சிலிர்த்து மண்ணைத் தன் காலடியில் உதறிக்கொட்டிவிட்டு அதன்மீது ஏறி மேலெழத் தொடங்கியது. விவசாயியும் அயலவர்களும் தொடர்ந்தும் விரைவாக மண்ணை அள்ளிக் கிணற்றினுள் போட்டனர். அதே வேகத்தில் அவற்றையெல்லாம் விடா முயற்சியால் உதறிவிட்டபடி கழுதை கிணற்றுக் கட்டின் மட்டம்வரை வந்ததும் மகிழ்வோடு கத்திக்கொண்டு தோட்டத்தினுள் ஓடிமறைந்தது.

**சவாலைச் சந்தித்தலும் மீண்டெழுதலும்**

இந்தக் கதையில் உள்ளதுபோல் எமது வாழ்விலும் பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கும். எம்மைத் தருணம்பார்த்து வீழ்த்துவதிலும், தூற்றுவதிலும், தோற்கடிப்பதிலும் பலர் திட்டமிட்டுச் செயற்படலாம். அதற்குக் காரணம் எங்கள்மீது மற்றவர்களுக்கு உள்ள பயம். அந்தப் பயமே உங்களது பலமாக நினைத்துக் கொள்ளவேண்டும். பிறரின் வஞ்சனைகளையும், தூற்றல்களையும்; இந்தக் கழுதையைப்போல் உதறிவிட்டபடி அதன் மீது ஏறி மேலே வாருங்கள். உங்கள் விடாமுயற்சியும், நம்பிக்கையும், சவால்களை எதிர்கொள்ளும் திறனும் உங்களிடத்தில் இருந்தால் உங்களை யாராலும் நிரந்தரமாக வீழத்திவிட முடியாது.

**தோல்வி முடிவல்ல**

மனிதர்கள் பல இடங்களில் தோல்விகளையோ, வீழ்ச்சிகளையோ கண்டு தமது வாழ்வு முடிந்துவிட்டதென்று எண்ணி விடுகின்றனர். இன்னும் சிலர் தாம் நம்பிக்கையோடு பழகியவர்கள் துரோகத்தனமாக தன்னை அழிக்கவோ, வீழ்த்தவோ நினைத்தால் மனமுடைந்து எல்லா நம்பிக்கைகளையும் இழந்தவர்களாகின்றனர்.

இந்தக்கதையில்கூறப்பட்ட கழுதைதான் கிணற்றில் விழுந்துவிட்டேன். எனது கதை இத்தோடு முடிந்ததென்று எண்ணவில்லை. தனது எஜமானே தன்னை மண்ணுக்குள் புதைக்கின்றார் என்றும் மனமுடைந்து போகவில்லை. இறுதிவரை நம்பிக்கையோடும் விடா முயற்சியோடும்போராடிஉயிர்பிழைத்தது.

**நம்பிக்கை அவசியம்**

'விழாமலே வாழ்ந்தோம் என்பதல்ல பெருமை. விழும் ஒவ்வொருமுறையும் மீண்டும் எழுந்தோம் என்பதே வாழ்வின் பெருமை' என்றார் நெல்சன் மண்டேலா. விழுகின்ற போதெல்லாம் நாம் உரம்கொண்டு எழுவோம் என்று நம்பிக்கை கொள்ளவேண்டும். எம்மீது தூவப்படும் மண்ணின்மீது ஏறி நடைபோடவேண்டும்,

எம்மீது வீசப்படும் கற்களைக்கொண்டு படிக்கட்டுக்களை அமைக்கவேண்டும். எம்மீது கொட்டப்படும் குப்பைகளை எம் காலடியில் போட்டு அவற்றை உரமாக்கி நாம் மகிழ்வாய் செழித்து வாழவேண்டும். வாழ்க்கை உங்களை எந்தக் குழியில் வீழ்த்தினாலும், உங்கள் மீது எது கொட்டப்பட்டாலும் நம்பிக்கையையும் விடாமுயற்சியையும் கைவிடாதவரை நீங்கள் மூழ்கப்போவதில்லை.

இந்தக் கழுதையைப் புதைக்க நினைத்த விவசாயியைப்போல் உங்களைவீழ்த்த எண்ணுபவர்கள் அந்த இடத்திலேயே நேரத்தையும் தமது சக்தியையும் செலவழித்துவிடுவர்.

நீங்களோ அவர்களின் இந்தச் செயலின் நிமிர்த்தம் மேலுயர்த்தப்பட்டிருப்பீர்கள். வீழ்ந்த இடத்தில் முளைக்கும் விதைகள்போல் வீழ்ந்த இடத்தில் மேலோங்கி எழுவீர்கள்.

# அன்பான ஆட்சிசெய்ய

அருமைச்சந்திரன்



அன்புதான் இந்த உலகத்தை செலுத்தும் சக்தி. பலவிதமான மனித உறவுகளிடமும் நாம் எதிர்பார்ப்பதும் பெறவிரும்புவதும் அன்புதான். துன்பமும் பயமும் நிறைந்ததாக நாம் எண்ணுகின்ற வாழ்வில் அன்புதான் ஒரே ஆறுதல். சிலரிடம் பிரச்சினைகளை பகிர்ந்து கொண்டால் மனம் பாதுகாப்பாக உணவர்வதற்கு காரணம் இதுதான். அன்பாக இருப்பதிலும் அன்புசெலுத்துவதிலும் ஈடுபாடு காட்டுவதன்மூலம் எப்போதும் சந்தோச உணவு ஏற்படுகிறது. அன்பு என்பது என்ன? பல அர்த்தங்கள் பொதிந்த வார்த்தை இது. அவ்வளவு எளிதில் வரையறுத்துச் சொல்லமுடியாது. மேலும் அந்த அளவுக்கு அன்பு ஆழமான வார்த்தையோ அதே அளவுக்கு மலினப்படுத்தப்பட்டும் உபயோகத்தில் இருக்கின்றது என்பது வருத்தமானதே.

**அன்பு என்றால் என்ன?**

சரி அன்பு என்பது ஒரு கருத்தா? அல்லது தத்துவம் என்று சொல்லலாமா? நான் சந்தோசத்தை விரும்புகின்றேன். கடவுள் அன்பாக இருக்கின்றார். நான் உன்னைக்காதலிக்கின்றேன். என்னுடையதாயை நேசிக்கின்றேன். இவை எல்லாம் என்ன? அன்பை வெளிப்படுத்துகின்ற பல்வேறு வார்த்தைகள். அன்புதான் இந்த வார்த்தைகளின் மையம்.

அன்பு எங்கே கிடைக்கும், எங்கே வாங்கலாம், அன்பை செலுத்தமுடியுமா? அன்பைப் பற்றிய கேள்விகள் நிறையவே உள்ளன. அன்பு என்ற உணர்வு உள்மனதிலிருந்து எழ வேண்டியது. சந்தோசத்தை விரும்புவதும் கடவுள் அன்பாக இருப்பதும், காதலிப்பதும், தாயை நேசிப்பதும் உணர்வுபூர்வமாகச் செயற்படுத்த வேண்டும்.

**பிரச்சினைகளில் இருந்து தப்பித்தலல்ல வாழ்க்கை**

நாம் எல்லோரும் தினசரி பிரச்சினைகளிலிருந்து தப்பிப்பதையே வாழ்க்கையாகக் கொண்டிருக்கின்றோம். அதற்கென நாம் பல வழிகளையும் கண்டுபிடித்து வைத்திருக்கின்றோம் பிரச்சினைகளிலிருந்து தற்காலிகமாக தப்பித்துக்கொள்ள உதவும் உத்திகள் தான்தொலைக்காட்சி, கடவுள்வழிபாடு, திரைப்படம், எழுதுதல். இவை எல்லாம் தற்காலிகத் தீர்வையே தரவல்லன. ஆனால் அன்பை உணருதலும் பகிர்தலுமே நீண்டகாலத் தீர்வை வழங்கவல்லன.

பலரிடம் நாம் அன்பாக இருப்பதாகச் சொல்கின்றோம், பேசுகின்றோம்.ஆனால் உண்மை என்ன? மனம் நிறைந்த அன்பு மட்டுமே பயனைத் தரும். உள்ளன்போடு செய்யும் எந்தச் செயலும் மன மகிழ்வைத் தரும்.

காலையில் இருந்து மாலை வரை நாம் பல மனிதர்களைச் சந்திக்கின்றோம். சிரிக்கின்றோம் பேசுகின்றோம் இவர்களில் எத்தனை பேரிடம் உண்மையான அன்போடு சிரித்துப் பேசி இருப்போம். உதடுகள் சிரிப்பதை விடுங்கள்.

பொய்யாகச்சிரித்து போலியாகப்புகழவேண்டிய கட்டாயம் பலருக்கும் வாழ்வின் பல நிலைகளிலும் ஏற்பட்டிருக்கலாம். எம்மில் எத்தனை பேர் சந்திக்கின்ற அனைவரிடமும் அன்பாக இருந்திருப்போம். எவ்வளவு துன்பங்கள் பிரச்சினைகள் இருப்பினும் அனைத்தையும் மறந்து மகிழ்ந்திருக்கச் செய்கின்ற சக்தி அன்புக்கு மட்டும்தான் உண்டு. அன்புக்கு மட்டுமே வாழ்வை இனிமையாக நகர்த்திச் செல்கின்ற சக்தி உண்டு. எனவே எல்லோரிடமும் அன்பாக இருப்போம்.




காலங்காத்தால
கோழி மாதிரி எந்திரிச்சு

காக்கா மாதிரி குளிச்சிட்டு



குரங்கு மாதிரி லபக் லபக்னு திண்டிட்டு

பந்தயக்குதிரை மாதிரி வேக
வேகமாக அலுவலகத்துக்கு ஓடி...




மாடு மாதிரி உழைச்சு




நாயா குரைச்சு



பொண்டாட்டி எக்குத்தப்பா ஏதாவது
கேட்டா ஆந்தை மாதிரி முழிச்சு

அப்புறம் ராத்திரி சாப்பாட்டை முதலை
மாதிரி முழுங்கிட்டு




எருமை மாடு மாதிரி தூங்க
வேண்டியிருக்கு...



twitter.com/pcshubha

இருக்கும் போது அனுமதியில்லையாம்.
இறந்த பிறகு மலர் வளையமாம் #விதவைக்கு



# பரத் பொலிஸாக நடிக்கும் 'காளிதாஸ்'

பரத் நடித்த 'தம்பிக்கு எந்த ஊரு', 'வானம்', 'அரவாண்', 'ஐந்து ஐந்து ஐந்து' 'கில்லாடி', 'என்னோடு விளையாடு', 'கடுகு' உட்பட எந்தப் படமும் அவருக்குக் கைகொடுக்கவில்லை. அவர் வில்லனாக நடித்த 'ஸ்பைடர்' படமும் தோல்வி அடைந்து தற்போது சிம்பா, பொட்டு ஆகிய படங்களில் நடித்து வருகின்றார்.

பரத்துக்கு இப்போது ஒரு வெற்றிப் படம் தேவை என்பதால் அவர் தேர்வு செய்திருக்கும் படம் 'காளிதாஸ்' இதில் பரத் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் சிவநேசன் தயாரிப்பில் குறும்பட இயக்குநர் செந்தில் இயக்குகிறார். பரத் ஜோடியாக மலையாள நடிகை அன் ஷீத்தல் நடிக்கிறார். இவர்களுடன் ஆதவ் கண்ணதாசன் நடிக்கிறார். விஷால் சந்திரசேகர் இசை அமைக்கிறார். இது ஒரு துப்பறியும் படமாக உருவாகிறது.




twitter.com/SaranyaTwtzz

புகைப் பிடித்தல் உடல்
நலத்திற்கு கேடு!!
பகைப் பிடித்தல் மன
நலத்திற்குக் கேடு!!!

ஞாபக மறதியில் அவஸ்தை படுபவர்களை விட..... மறக்க வேண்டியதை ஞாபகம் வைத்து அவஸ்தைப் படுபவர்கள் தான் அதிகம்.......!!





பொழுதைப் பறித்த அலைபேசிகள்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பொது நலப்பணியில் ஆர்வம் உண்டாகும். திறம்பட செயல்பட்டு புதிய சாதனை புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி திருப்திகரமாகும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**இடபம்:** இனிய அணுகுமுறையால், நன்மை காண்பீர்கள். உறவினர், நண்பரிடம் கூடுதல் மதிப்புக் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** சமூகத்தில் நற்பெயர் பெறுவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள குளறுபடி சரி செய்வதால், வளர்ச்சி சீராகும்.

**கடகம்:** மற்றவர் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபார நிலை தாமதகதியில் இருக்கும். இலாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**சிங்கம்:** இனிய பேச்சால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கன்னி:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவருக்கு ஆலோசனை சொல்ல வேண்டாம். தொழில், வியாபார த்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சுமாரான பணவரவு இருக்கும்.

**விருச்சிகம்:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பிள்ளைகளின் செயல்பாடு மனதிற்கு நிம்மதியளிக்கும்.

**தனுசு:** புதிய திட்டங்களை திட்டமிட்டபடி செயல்படுத்துவீர்கள். தொழிலில் இடையூறு விலகி உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். இலாபம் அதிகரிக்கும்.

**மகரம்:** நேர்மை எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.

**மீனம்:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். வாக்குறுதி நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | | | |
| | 8 | | | 7 | | | 3 | |
| 9 | | 6 | | | | 8 | | 5 |
| | | 8 | | | | | | 2 |
| | 4 | | | 1 | | | 7 | |
| 5 | | | | | | 9 | | |
| 6 | | 2 | | | | 4 | | 9 |
| | 3 | | | 8 | | | 1 | |
| | | | 4 | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 2 | 1 | 3 | 7 | 8 | 5 | 9 |
| 1 | 8 | 9 | 6 | 5 | 2 | 7 | 3 | 4 |
| 3 | 7 | 5 | 9 | 4 | 8 | 1 | 6 | 2 |
| 2 | 9 | 4 | 3 | 1 | 6 | 5 | 7 | 8 |
| 6 | 5 | 7 | 8 | 9 | 4 | 2 | 1 | 3 |
| 8 | 1 | 3 | 2 | 7 | 5 | 9 | 4 | 6 |
| 7 | 4 | 6 | 5 | 8 | 9 | 3 | 2 | 1 |
| 9 | 2 | 1 | 7 | 6 | 3 | 4 | 8 | 5 |
| 5 | 3 | 8 | 4 | 2 | 1 | 6 | 9 | 7 |

## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் கும்பாபிஷேக தினவிழா



23.01.2018

செவ்வாய்க்கிழமை

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலில் கும்பாபிஷேக தினமாகிய 2018.01.23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அம்பாளுக்கும் அனைத்து பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகம் நடைபெறும் உச்சிக்கால பூசையைத் தொடர்ந்து விசேட வசந்தமண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வெள்ளை எருதேறி உள்வீதி, வெளிவீதி, உலா வந்து நம்பி வரும் அடியார்களுக்கு நல்லருள்தருவார்.

இத்தினத்தில் வருகை தந்து அம்பாளின் பேரருளைப் பெற்றேகுமாறு அடியார்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னையின் பணியில்

நா.யோகநாதன்

செயலாளர்

அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்,நயினா தீவு

(C7 5603.16.17)


## மரண அறிவித்தல்கள்

### கனகரத்தினம் ஸ்ரீபத்மநாதன்

(முன்னாள் தலைமை எழுது வினைஞர், (Chife Clerk), மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவு)



மண்ணில் 16.02.1927 விண்ணில் 18.01.2018

யாழ். அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும், சுவிஸ் Bern ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் ஸ்ரீபத்மநாதன் அவர்கள் (18.01.2018) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் கண்மணி தம்பதிகளின் பாசமிகுமகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை இராசம்மா தம்பதிகளின் அன்புமருமகனும், காலஞ்சென்ற பத்மாவதி (அம்மராசு) அவர்களின் அன்புக்கணவரும், யாழினி, காலஞ்சென்ற நிரோஜினி மற்றும் குமுதினி, பார்த்திபன்(பாபு) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன் (அளவெட்டி), பாரிசாதமலர் (மலேசியா), தனபாக்கியம் (ராசாத்தி மலேசியா), தனலட்சுமி (மலேசியா), காங்கேயன் (லண்டன்), புவனேஸ்வரி (மலேசியா) மற்றும் ஞானம்பிகை (மலேசியா), பரமேஸ்வரி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,காலஞ்சென்ற தவராஜா மற்றும் ஆனந்தராஜா, கலைவேந்தன், துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான விமலேசன் (மலேசியா), முருகேசு(மலேசியா), திருநாவுக்கரசு (மலேசியா), புஸ்பரத்தினம் (இலங்கை), கமலாவதி (இலங்கை), லீலாவதி (இலங்கை), தர்மச்சந்திரன்(இலங்கை) மற்றும் நடராஜா (மலேசியா), இராசமணி (பிரித்தானியா), நடராஜா (மலேசியா), சிவலிங்கம்(மலேசியா), ..ரி (பிரித்தானியா), இராமச்சந்திரன் (இலங்கை), பூபாலன் (மலேசியா), பூபதி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்புஜன், கீர்த்தனா, சக்திபவன், சக்திஜோதி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2018) திங்கட்கிழமை Bremgartenfriedhof, Murtenstrasses 51, 3008 Bern Switzerland இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

..ன்புஜன் (077 292 0304)

(c 5606/8)



### திருமதி பெனடிக்ற் சந்திரன் சாந்தி மஞ்சுளா

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் இலண்டன் (சிங்போட்) CHING FORD ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெனடிக்ற் சந்திரன் சாந்தி மஞ்சுளா 16.01.2018 செவ்வாய்க்கிழமை லண்டனில் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் துரைசிங்கம் மற்றும் தவமணி துரைசிங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் யோசெப் தேவராசா மற்றும்காலஞ்சென்றசந்திராதேவராசாதம்பதியரின் மருமகளும்பெனடிக்ற் சந்திரனின் பாசமிகு மனைவியும் கிறிஸ்ரின் சோபனா, பிறைன்டன் கௌதம்,ஜொஸ்லின்கல்பனாஆகியோரின்பாசமிகுதாயாரும்கிசோனா, சசானா, டெரிக்கா மஞ்சுளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரகுலேந்திரன், டெனிசியா இவான் ஜனின், கஜேந்திரன் ஆகியோரின் மாமியும் இந்திரவசந்தி, ராஜ்மோகன், கிரேஷி ஆனந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஞ்சினி, மேரி மல்லிகா, டொறிற்ரா, தேவச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 06.02.2018 செவ்வாய்க்கிழமை இலண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

154, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
யோ.தேவராசா (மாமன்)
077 172 3703
பெனடிக்ற் சந்திரன்
0044 208 527 9242

(CS 13139/15/17)

## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்ப நண்பர்களான

திருமதி சுந்தரேஸ்வரி வெற்றிவேல் அவர்களின் அன்புத் தாயாரும்

திருமதி வித்தியா துமிந்தன் , வெற்றிவேல் நித்தியா, வெற்றிவேல் கஜேந்திரன்

ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்

அனலைதீவைச் சேர்ந்தவரும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான

### திருமதி புவனேஸ்வரி நடராஜா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்லத்துரை செல்வராசா(நாதன்) குடும்பம்.

நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு

(AIA/IN/005607.16)


EASY ENGLISH WAY

ENGLISH WAY

திருமணமாகி U.K செல்வோரிற்கான IELTS LIFE SKILLS (A1, B1)

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
BASIC ENGLISH

FRENCH LANGUAGE
பிரான்ஸ், கனடா செல்வோரிற்கானது

தொடர்புகளுக்கு - 077 977 3050, 071 034 4064
44 பலாலி வீதி, யாழ்ப்பாணம்

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 244
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.01.21
ரூ. 82,329,396/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
X 09 30 52 73
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 144
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.01.21
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 58,356,445/-
வெற்றி இலக்கங்கள்
07 09 34 52 K
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 21.01.2018
வெற்றி வாரம் 2240
வர்ணம் ஊதா
மீனம்
வெற்றி இலக்கங்கள் 03 29 35 38
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 8,537 ,440/=
2018.01.23 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும், அல்லது துரித அழைப்பு 1919


## மரண அறிவித்தல்கள்

### முத்தையா பாலசுப்பிரமணியம் (பாலன்)



தோற்றம் 08.12.1952 மறைவு 18.01.2018

காரைநகர் இடைப்பிட்டி சுப்பிரமணியம் வீதியினைப் பிறப்பிடமாகவும் 16, Harley Road, Harrow Ha1 4xg லண்டனை வசிப்பிடமாகவும்கொண்ட முத்தையா பாலசுப்பிரமணியம் 18.01.2018 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்எதிர்வரும் 25.01.2018 வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நித்தி (சகோதரர்)
077 945 7790
இடைப்பிட்டி, காரைநகர்.
0044 208 863 9445 - லண்டன்

(AIA/9104H/13.17)

# வெட்டுக்கிளி

## இயற்கையின் படைப்பியல் அசைவான சிற்றினங்கள்

**பருவ வளர்ச்சி**

வெட்டுக் கிளிகளில் பெண்களே ஆணை விடவும் பெரிதாக இருக்கும். பருவம் கொண்ட பெண்கள் தங்கள் உடலின் நெடி கொண்டு ஆணை அழைக்கின்றன. இந்த நெடியை சில சமயங்களில் நாமும் அறிந்துகொள்ளலாமென அறிவியலாளர்கள் கூறுகின்றனர். பருவம் எய்த ஆண்கள் தங்கள் உடலைப் பின்னங்கால் உதவியோடு உயர்த்தி நிமிர்ந்த படி தன் இரு இறக்கைகளையும் மேலும் கீழுமாக அசைத்து ஒலி எழுப்பும். உடன்படும் ஜோடிகள் உடலுறவில் ஈடுபடுகின்றன. உடலுறவு என்பது பல மணி நேரம், பல தடவை, பல ஆண் பெண்களோடு கலவையாக நடப்பதாக சொல்லப்படுகிறது. உடலுறவுக்கேற்ற கால, நேர, சந்தர்ப்ப, சூழல்களை ஒருபோதும் இவை ஏற்றுக் கொள்வதில்லை.

பெண் வருடத்திற்கு குறைந்தது 5 முறையாவது முட்டை யிடுகிறது. முட்டைகளை சற்று நீர்ப்பாங்கான இடங்களில் 1 சென்ரி மீற்றர்கள் அளவுடைய குழியைப் பறித்து இடுகின்றன. மலப்புழையின் இறுதியில் அமைந்துள்ள மிகச் சிறிய கொக்கி போன்ற அமைப்பு மூலமே பூமியில் குழி தோண்டிக் கொள்கின்றன. இவை அண்ணளவாக 180 முட்டைகள் வரையில் இடுகின்றன. கஞ்சி போன்ற திரவம் முட்டைகளை மூடியி ருக்கும். 18 நாள்களுக்குப் பின் பொரிந்து குஞ்சுகள் வெளிவருகின்றன. காலநிலை மாறுபாடு என்பது வெட்டுக்கிளிகளின் சுரப்பிகளைத் தூண்டி, அதிகமாக சுரக்கச் செய்து ,அதிக உடலுறவில் ஈடுபடச் செய்கிறது.வெட்டுக்கிளிகளின் அதீத இனப்பெருக்கத்துக்கு இதுவே காரணம் என்கிறனர் சார்லஸ் வேலண்டைன் ரிலே மற்றும் நார்மன் சிரிடில். இவர்களின் ஆய்வே வெட்டுக்கிளிகள் குறித்தான சிறந்த ஆவணமாகத் திகழ்கிறது.

**வசிப்பிடத்தின் அமைவும் ஆயுளும்**

வெட்டுக்கிளிகள் பொதுவாக பிரதேசம் சார்ந்தவை. பூச்சி மருந்துகளின் பாதிப்பு, எதிரிகளின் தொல்லை கருதி இவை இடம் பெயருகின்றன. உலகளாவிய அளவில் விவசாயிகளின் எதிரியாகக் கருதப்படும் இவை இரசாயன மருந்துகளின் பாவனையால் அதிகம் கொல்லப்படுகின்றன.

ஓர் ஆய்வின்படி வெட்டுக்கிளிகள் 27 நாள்களில் 400 கிலோ மீற்றர்கள் பயணித்ததாக அறிக்கை வந்துள்ளது. அதிகபட்சமாக 14 வருடங்கள் வரை வாழக்கூடியவை.இவை எப்போதும் அதிக புரதச்சத்து, அதிக நார்ச் சத்து கொண்ட கோதுமை, கம்பு, சோளம் போன்றவற்றையே உணவாக உட்கொள்கின்றன.

**உணவுப் பயன்பாடு**

பசியாலும், பஞ்சத்தாலும் கையேந்தி நிற்கும் ஆபிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, நைஜர், உகாண்டாவைச் சேர்ந்த மக்கள் இவற்றைப் பிடித்து அவற்றின் இறக்கை மற்றும் கால்களை வெட்டி அகற்றிவிட்டு வறுத்து உப்புப் போட்டு உண்பதாகச் சொல்லப்படுகிறது. போர்க் காலங்களில் அவர்களின் முதன்உமைணவாக இவையே இருந்துள்ளன.

தவிர, ஆஸ்திரேலியப் பழங்குடிகளில் பெண்கள் தாங்கள் கருவுற்ற காலத்தில் அதிகமாக வெட்டுக்கிளிகளையே உண்பதாகக் கூறப்படுகிறது. அதேபோன்று செங்கால் நாரை, ஆந்தைகள் என்பனவும் இவற்றை இரவில் பிடித்து உண்கின்றன. உடலுறுதி கொண்ட வளமான சந்ததிகளை உருவாக்குவதே இந்த உணவுப் பழக்கத்தின் தாற்ப் பரியமாகச் சொல்லப்படுகிறது

## நான்காவது சுற்றில் டொமினிக் தெய்ம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் டொமினிக் தெய்ம்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது சுற்று ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஐந்தாம் நிலை வீரரான டொமினிக் தெய்மை எதிர்த்து பிரான்சின் அட்ரியன் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:4, 6:2, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டார் தெய்ம். (ம)






# தொடரை வென்றது இங்கிலாந்து அணி

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றி, டெஸ்ட் தொடரில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது இங்கிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 302 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பட்லர் 100 ஓட்டங்களையும், வோக்ஸ் 53 ஓட்டங்களையும், மோர்கன் 41 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் ஹசில்வூட் 2 இலக்குகளையும், கம்மின்ஸ், ஸ்ரொய்னிஸ், சாம்பா, மார்ஷ் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பின்ஞ் 62 ஓட்டங்களையும், ஸ்ரொய்னிஸ் 56 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

வூட், வோக்ஸ், ரசிட் மூவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். (ம)

## ஜோகோவிக் அசத்தலாட்டம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் சேர்பிய வீரர் ஜொகோவிக்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து ஸ்பெய்னின் ராமோஸ் மோதினார். ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 6:2, 6:3, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் ஜோகோவிக். (ம)



## நியூகாஸ்டில் அணியை வீழ்த்தியது மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது மன்செஸ்டர் சிற்றி.

நியூகாஸ்டில் அணியை எதிர்த்து மன்செஸ்டர் சிற்றி அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது. மன்செஸ்டரின் சார்பாகப் பதிவான மூன்று கோல்களையும் சேர்ஜியோ அக்கியூரோ பதிவுசெய்தார். அவர் ஆட்டத்தின் 34ஆவது, 63ஆவது, 67ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்தார். 83ஆவது நிமிடத்தில் நியூகஸ்டில் அணியின் கோல் பதிவானது. (ம)





## செரபோவா வெளியேற்றம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் முன்னணி வீராங்கனை கெர்பர்.

செரபோவாவை எதிர்த்து கெர்பர் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:1, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டார் கெர்பர். (ம)

# சிம்பாப்வேயை வீழ்த்தி இலங்கை அணி பதிலடி



முத்தரப்புத் தொடரில் நேற்று நடைபெற்ற சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்று கடந்த ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது இலங்கை அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணி 44 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெய்லர் 58 ஓட்டங்களையும், கிரீமர் 34 ஓட்டங்களையும், வோலர் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பெரேரா 4 இலக்குகளையும், பெர்னான்டோ 3 இலக்குகளையும், சன்டகன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 44.5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக குசல் பெரேரா 49 ஓட்டங்களையும், திசர பெரேரா ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும், சந்திமல் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக திசர பெரேரா தெரிவானார்.

முத்தரப்புத் தொடரின் அடுத்த ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டத்தில் சிம்பாப்வே தோல்வியடைந்தால் இலங்கை இறுதிக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். அதேநேரம் சிம்பாப்வே வெற்றி பெற்றால் இலங்கைக்கு வாய்ப்பு குறைவடையும். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள் கலந்துகொள்ளும்
இலவச ஆங்கில வகுப்பு [English Workshop]
27. 01. 2018 சனிக்கிழமை
பிரிவுகள் (இரண்டு பிரிவுகளில் ஏதாவதொன்றில் பங்குபெறமுடியும்)
1.காலை 10-12 2.மாலை 03-05
பங்குபற்றியமைக்கான சான்றிதழ் மற்றும் கையேடு இலவசம்.
இலவச வகுப்பு ஊடாக வார மற்றும் வார இறுதிநாள் வகுப்பில் இணையமுடியும்.
SAAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்நகர்.
021 320 3313 077 1570 486

## மரண அறிவித்தல்

## கந்தன் தங்கராசா

(மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழை)



மாவிட்டபுரம், பளையை பிறப்பிடமாகவும் V.C.C மாவிட்டபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் தங்கராசா 20.01.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - சீதேவி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (Nature's Secret's Distributor), இராஜேஸ்வரன்(பிரான்ஸ்), வாகேஸ்வரி (பிரான்ஸ்), சத்தியேஸ்வரி, கணேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்கனி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, ஆசிரியர்), கணேசநாதன்(பிரான்ஸ்), ஜெயந்தினி (பிரான்ஸ்), சசீகரன்(வேலணை), ரதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திஷாரகி, பாருஸ்னியா, தாரிஷா, கவிசனா, கவிவர்சன், கஜீவினி, சாருஜனியா, சஜின்வாஸ், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு தெல்லிப்பழை கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாவிட்டபுரம் தெற்கு,**
**தெல்லிப்பழை.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

077 271 8954

# ரபேல் நடால் காலிறுதியில்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் ஆண்கள்ஒற்றையர்பிரிவில்காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான நடாலை எதிர்த்து டியேகா மோதினார். ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 4:6 என்ற செற் கணக்கில் இழந்தார் நடால். இதனால் அடுத்த நான்கு செற்களில் மூன்று செற்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற நிலை. அடுத்த மூன்று செற்களையும் முறையே 6:3, 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் நடால். (ம)

## மூன்றாவது ஆட்டத்துக்காக

# இந்திய அணி கடும் பயிற்சி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தை எதிர்கொள்வதற்காக இந்திய அணி நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றும் பயணம் மேற்கொண்டுள்ளது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்து விட்டன. அவற்றில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டத்தின் முடிவு கிண்ணத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாக அமையப்போவதில்லை. எனினும் 0:3 என்று வழித்துத் துடைக்கப்படாமல் குறைந்தபட்சம் 1:2 என்று முடிப்பதற்கு இந்தியா முனைப்புக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா தொடரை, 3:0 என்று கைப்பற்றுவோம் என்று நம்பிக்கை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மகாஜனா வென்றது வெண்கலம்



யாழ்ப்பாணம், ஜன. 22

சமபோச கிண்ணத்துக்கான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து மொனராகல நல்லபுரவதி மகா வித்தியாலய அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வீராங்கனை நிலோஜிகா ஒரு கோலைப் பதிவு செய்தார். அந்தக் கோலே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதின. மேலதிக கோல்கள் எதுவும் பதிவாகவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது தெல்லிப்பழை மகாஜனா. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.